159

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 17.] ப்ரபவஹூ, ஆடிமீ [ஸஞ்சிகை 10

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥
[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

## *பகவத் ராமாநுஜ மதத்தின் ஸர்வலோக ஹிதத்வம்.

[ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர் பி. ஏ. பி. எல்.]

“ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்ஜ்வலா ।
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ ॥”

[பகவான் ராமாநுஜன் ப்ரவர்த்தநம் செய்த திவ்ய மதம் நாள்தோறும் மேன்மேலும் ஒளி பெருகித் திக்கெட்டுக்களிலும் பரவி நிரம்பியதாகுக. அது உலகுக்கெல்லாம் சாச்வதமான நன்மையைப் பயக்கத்தக்கதன்றோ?] என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரதிதிநமும் பகவத் ஸந்நிதியில் ப்ரார்த்திப்பது ஸ்ரீவைஷ்ணவர்களின் மத அபிநிவேசத்தை மட்டும் பற்றியதா? அல்லது

* இது (1927ஹூ மே மாதம்) பிரபவஹூ வைகாசி மாஸத்தில் ஸ்ரீபுள்ளம் பூதங்குடியில் நடந்த ஸ்ரீவைஷ்ணவ மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர்ஸ்வாமி செய்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

அம்மதத்துக்கு ஸ்வபாவமாக உள்ள ஏற்றத்தைப் பற்றியதா? மதாபிமாநம் எவருக்கு முண்டு. ஆயினும் நம் மிராமாநுஜனால் 'த்ராதம் ஸஜ்ஜநம்' என்றபடியே பலவித அபாயங்களினின்றும் நன்ருய் ரக்ஷிக்கப்பட்டு நமக்கு தாய தநம் போல் கொடுக்கப்பட்டதும் 'அவிஹத: ஸம்ஜநநம் ஹம்ஜநநம்' என்று ஸ்ரீதேசிகன் அநுபவித்ததுமான இம்மதம் ஏனைய மதங்களில் உண்டாகும் அஜ்ஞாந இருள்களனைத்தையும் மாற்றி எழில் ஞான விளக்கை நம் மனத்திலேற்றி உய்யுமாறு காட்டுதலில் எம்மதத்தையும் அதிசயித்து நிற்பதால் இதுவே ஸர்வலோக ஹிதத்தின் பொருட்டாகக் கடவதென்று ப்ரமாணங்களைக்கொண்டு தீர்மானிக்கவும் அமையும்.

ஸ்ரீதேசிகனே தமது விபவ தசையிலுள்ள மதங்களை யெல்லாம் நன்கு பராமர்சித்து முற்கூறியபடியே நம் தர்சநத்தை 'இருளனைத்தையும் போக்க வல்ல' தென்று நிறுத்தியும், தமக்கும் புலப்படாத கணக்கற்ற மதங்கள் தேசாந்தர காலாந்தரங்களில் உண்டாகக் கூடியன வென்று கணிசித்து, இது, அவை யாவையும்விடச் சீரியதாமெனக் காட்டும் அம்சங்களை யுடையதென விளக்கினு லல்லது 'அவிஹத: ஸம்ஜநந' மாகா தென்பதைத் திருவுள்ளம் பற்றிப் பரமதபங்கம் முதலிய க்ரந்தங்களில் அவற்றைச் சுருங்க அருளிச்செய்துளார். எனவே இக்காலத்தில் ஸ்ரீராமாநுஜ மதத்தின் ஸர்வலோக ஹிதத்வத்தை ஸ்தாபிக்க முன் வந்தால் கிறிஸ்தவ மஹம்மதீயாதி விதேச மதங்களைப் பற்றவும் அதன் உத்கர்ஷத்தைக் காட்டி அவ்வோ மதஸ்தர்களுடைய மத அவாக்களுக்குப் போதுமான பரிஹாரங்களைக் காட்டவேண்டியது அவசியமாகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பல தேச மதங்களையும் ஒருங்கு நிறுத்திச் சீர்தூக்குவது இக்காலத்திய படிப்பின் முறையில் முக்யமான தொரு ஆகாரம். ஐரோப்பிய வித்வான்கள் நம் தேச மதங்களையும் பிற தேசத்தவற்றையும் பலபடிகளில் ஆராய்ந்து. மத ஸம்பந்தமான உந்நத லக்ஷ்யங்கள் இன்னின்ன மாதிரி யிருக்கக்கடவன வென்றும், மத விசாரம் என்பது இன்னதென்றும், பலவிதமாகப் புத்தகங்களில் வெளியிட் டிருக்கின்றனர். அவற்றை யெல்லாம் இங்கு எடுக்க முடியாது. ஆனுலும் அவை பொதுவாக மூன்று ஆசிரியர்களால் தனித்தனியே கூறப்பட்ட மூன்று தனிக் கொள்கைகளுக்குள் அடங்கியிருப்பனவாகத் தோன்றுகின்றன. அவைகள் இக்காலத்தவர் விரும்பும் ஸர்வோத்க்ருஷ்டங்களான மத லக்ஷ்யங்க ளென்னலாம். எனவே அவை நம் மிராமாநுஜ மதத்தில் நிலைத்து மற்ற விடங்களிற் காட்டிலும் உயர்ந்த ஆதாரத்தோடு விளங்குவனவாக ஏற்பட்டால், இதுவே 'ஸர்வலோக ஹிதைஷிணீ'' என்னக் குறையில்லை.

மூன்று ஐரோப்பிய வித்வான்களின் கூற்றுக்கள்.

இவர்களில் ப்ரஸித்திபெற்ற ஸம்ஸ்க்ருத பண்டிதரான மாக்ஸ் மூலர் (Max Muller) என்பவர் கூறுவது:—மத மென்பது நமது புலன்

களுக்கும் யுக்திக்கும் எட்டாத அதிரிக்த (beyond) விஷயங்களை விசாரிக் கத்தக்கது. அவற்றிற்குப் பெயர் ஏதாயினு மாகட்டும் என்றும், இதை அநுஸரித்தவையாயு மிருக்கிறது. இவர் அபிப்ராயத்தில் இந்தச் சரீர வாழ்க்கைக்குப் பிறகுள்ள அல்லது முன்னிருந்தவோ இருந்திருக்கக்கூடி யவோ விஷயங்களைப் பற்றி மதம் சொல்லவேண்டுமென் றாயிற்று. அதாவது ஆத்மா, மோக்ஷம், மோக்ஷ உபாயம், ஈச்வரன் முதலியவைகளைப்பற்றிய தாகவேண்டும்.

இப்போது வெகு ஸமீபத்தில் பிரேஸர் (Professor Frazer) என் னும் ஆசிரியர் தாம் இயற்றிய புத்தகமொன்றில் மத மென்பது பிசாசு இந் த்ர ஜால வித்யை (magic) முதலியவற்றில் உண்டாகும் நம்பிக்கையின் பரி ணும மென்று தீர்மானித்து, மதத்துக்கு லக்ஷணம் 'மனிதனைவிட அதிக சக்த்யாதிகளை யுடைய புருஷ ஞெருவன் உளனென்பதும், அவனை ப்ரீதி செய்து நமக்கு அநுகூலமாக்கிக்கொள்ளும் உபாயங்க ளுண்டென்றும் நம்பு வதுவே' என்று முடித்தார்.

இவர்களுக் கிடையில் ராஜீய நிகழ்ச்சிக்கார ரென்று எங்கும் பேசப் படும் லியோ டால்ஸ்டாய் (Leo Tolstoy) என்பவர் 'மதமானது ஸர்வ ஜந ஸமூஹத்தின் ஹிதத்தை நாடியதாக வேண்டு மென்றும், ஒவ்வொருவர்க் கும் பிறர்க்கும் பொதுவாய் ஜந ஸமூகத்துக்கும் (Community) உள்ள பரஸ் பர ஸம்பந்தங்களையும் கடமைகளையும் விசாரித்து அவரவர்கள் நடந்து கொ ள்ள வேண்டிய முறைகளைத் தீர்மானிக்கத் தக்க"தென்றும் சொல்லுகிறார்.

இம்மூவர் கொள்கைகளையும் சேர்த்து யோசித்தால் இக்காலத்தவர்க ளும் ஸர்வோத்க்ருஷ்ட மதத்தின் லக்ஷ்ய லக்ஷணங்களைக் கோரும் படிகள் தெளிவாகின்றன. எப்படியெனில்: மாக்ஸ்மூலர் சொல்லுகிறபடியில் மத மென்பது தேஹத்தைக் காட்டிலும் வேறானதும் பிறப்பு அழிவு முதலிய இல்லாத நித்யமுமான ஆத்மா வென்ன, இவ்வாத்மாவுக்கு இச்சரீரத்துக்குப் பிறகு நேரிடக் கூடிய ஸுகதுக்காதிக ளென்ன, ஸுகத்தை நாடுவதே எவருக்கும் ஸ்வபாவமாகையால் எல்லை யற்றதும் அழிவில்லாததுமான ஸுகம் கிடைக்க இப்போது நாம் செய்யவேண்டிய உபாயங்களென்ன, இவற்றையெல் லாம் நமக்குக் கொடுத்து ரக்ஷிக்கும் ஈச்வரனென்ன, ஆகிய இத்தகைய பொ ருள்களை விளக்க வேண்டியதாகிறது. பிரேஸர் சொல்லுகிறபடியில் இந்த ஈச்வரன் ஒரு மஹா புருஷனுக வேண்டும். இவனை வசப்படுத்தி நமக்கு அநுகூலமாக்கிக்கொள்ள வேண்டிய உபாயங்களையும் மதம் பேசவேண்டும். லியோ டால்ஸ்டாய் அபிப்பிராயப்படி, ஜீவர்களாகிய மனிதர்களுக்குள்ள பரஸ்பர ஸம்பந்தமும், ஸர்வசக்தியான ஈச்வரனுக்கும் மனிதனுக்கும் உள்ள ஸம்பந்தமும, இவற்றை அநுஸரித்து உலகத்தின் பொதுநன்மையை பாழ

புருஷார்த்தமாகையால் அதை லக்ஷ்யமாக வைத்துக்கொண்டு இவ்வாழ்வில் மனிதன் ஸ்வவிஷயத்திலும் ராஜீயம் முதலியவைகளிலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் மதத்தில் தீர விசாரிக்கப்படவேண்டு மென்று ஏற்படுகிறது.

### தத்வ ஹித புருஷார்த்தங்களின் ஆதாரம்.

இவற்றைத்தான் நம் தேச மதங்கள் தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்று வகுத்துப் பேசுகின்றன. இவ்விஷயங்கள் அந்தந்த மதங்களில் வெவ்வேறு மாதிரியாகச் சொல்லப்படுகின்றன. எனினும் முக்கிய அம்சங்களில் சில ஒற்றுமைக ளிருப்பதால் இவற்றை யெல்லாம் ஹிந்துமத மென்னும் பெயரால் வ்யவஹரிப்பது வழக்கம். வேற்றுமைகளும் பல இருக்கின்றன. வைஷ்ணவ மதங்களே அநேக விதங்கள். வடதேசத்தில் வழங்கும் ஸ்ரீக்ருஷ்ண சைதந்யர், ராமாநந்தர், நிம்பார்க்கர், வல்லபாசார்யர், துளஸிதாஸ் முதலிய மஹான்கள் ப்ரவர்த்திப்பித்திருக்கும் வைஷ்ணவ மதங்களுக்கும், நம் ஸ்ரீராமாநுஜ மதமான ஸ்ரீவைஷ்ணவ மதத்துக்கும் அடிப்படையிலேயே வெகு வித்யாசங்க ளுண்டு. பக்தி என்னும் பகவத் ப்ரேமையும், விஷ்ணு அல்லது அவதார ரூபங்களான க்ருஷ்ணன், ராமன், என்ற பரதத்வமும் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள; என்றாலும், மற்றப்படி சேதந அசேதந ஈச்வர தத்வ விவேசநாதிகளிலும், பரம புருஷார்த்த ஸ்வரூபத்தை விளக்குவதிலும், மற்றும் மோக்ஷ உபாய நிரூபணத்திலும், அதற்கு அநுகுணமான வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநாதிகளும், அம்மதங்கள் வேத உபநிஷதாதி ப்ரமாணங்களை முற்றிலும் பின்பற்றினவை யல்ல. சில மதங்களில் வேத விருத்த சாக்த தந்த்ரத்தின் ப்ரவேசமும் காணப்படுகின்றது.

ஸ்ரீவைஷ்ணவ மதமோ வென்றால் முழு வைதிக மதம். வேதத்தின் கர்ம காண்டத்தையும் ஜ்ஞாந பாகமாகிய உபநிஷத்துக்களையும், இவைகளின் வ்யாக்யாநங்கள் உபப்ருஹ்மணம் என்னப்பட்ட ஸ்ம்ருதி புராணாதிகளையும் சிறிதும் வழுவாமல் அநுஸரிப்பது. இதுவே வைதிக ஸித்தாந்திகளாகிய த்ரிமத ஆசார்யர்களாலும் ப்ரவர்த்தநம் செய்யப்பட்ட மதம். ஸ்ரீமத்வமதம் வைஷ்ணவ மென்று யாவரும் அறிவார்கள். ஸ்ரீசங்கராசாரியரும் ஸகுண ஈச்வரனை ஸ்ரீ விஷ்ணு வென்றே தீர்மானித்து, அவனை உபாஸிப்பதே மோக்ஷ ஸாதந மென்று உபதேசித்திருப்பதைப் பின்னால் சற்று விவரிப்போம். இம்மதமே உபநிஷத்துக்களில் ப்ரதிபாதிக்கப்படும் மஹாபுருஷ ரூபமான ப்ரும்மத்தை விளக்குவது (Theism of the Upanishads) என்று மேல்நாட்டு நிபுணர்களும் நிஷ்கர்ஷித்தார்கள்.

எனவே நாம் ஸர்வலோக ஹிதமென்று காட்டும் ஸ்ரீவைஷ்ணவமதம் வேத உபநிஷத்துக்களை முற்றிலும் ஆதாரமாக உடையது என்றதாயிற்று.

இதைத்தான் நம்மாழ்வார் நாதமுனிகள் துடக்கமான ஆசார்யர்கள் க்ரந்தங்களாலும் உபதேச பரம்பரைகளாலும் நமக்கு அளித்திருக்கிறார்கள். இதில் ஈச்வரன் அல்லது பரமபுருஷன் நிரூபிக்கப்படும் ப்ரகாரத்தைத் தெளிந்தால் கீழே நாம் அபேக்ஷித்த ஸர்வதேச ஸர்வகால ஸர்வஜந உசிதமான ஸர்வ ஹிதமாயிருக்கும் தத்வம் ஹிதம் புருஷார்த்தம் முதலியவை நிஷ்க்ருஷ்டமாக விளங்கிவிடும்.

## பரதத்வம் ஸ்ரீ விஷ்ணுவே.

உபநிஷத்துக்களில் தத்வ நிரூபணம் பண்ணுவதில் தைத்திரியம் முதலியன சில முக்யங்கள். "ததேதத் ஸர்வம் தைத்திரீயக ஏவ த்ரய்யந்த ஸுஸ்புடமாக" என்று ஸ்ரீ நடாதூர் அம்மாள் முதலிய பரமாசார்யர்கள் நிஷ்கர்ஷித்தார்கள். மற்றவை இதை யடியொற்றினவை. இது யஜுர் வேதத்தின் சிரஸ்ஸாக விளங்குவது. இவ்வேதத்தின் அமைப்பை ஆதி முதல் அந்தம் வரையில் ஒரு உருவமாக நோக்கினால் ஈச்வர தத்வம் வேதங்களில் நிற்கும் நிலை தெளியவரும். பூர்வ பாகமாகிய ஸம்ஹிதை யென்னும் கர்ம காண்டங்களில், யஜ்ஞங்கள், அவற்றால் ஆராதிக்கப்படும் அக்நி முதலிய தேவதைகள், யஜ்ஞங்களால் அடையக்கூடிய ஸ்வர்க்காதி பலங்கள் முதலியன விளக்கப்படுகின்றன. இதன் அடுத்த பாகமாகிய ப்ராம்மணத்தில் யஜ்ஞங்களைப்பற்றிய விதிகளைச் சொல்லும்போது அவற்றைப் பலத்தில் ஆசையை விட்டுப் பலம் கொடுக்கும் தேவதைகளுக் கெல்லாம் அந்தர்யாமியாய் இறையவராய் நின்று 'அவரவர் விதி வழி யடைய நின்ற' ஸர்வேச்வரன் ஆராதநங்களெனச் செய்வதின் பெருமை பேசப்பட்டுளது. இதையே 'யஜ்ஞ விதீயதேதி' என்ற ப்ரும்ம ஸூத்ரத்தில் ஸ்ரீ வ்யாஸ பகவானும் அருளிச் செய்தார். பின்னர் ஆரண்யகம் என்னும் பாகத்தில் ப்ரும்ம ஜ்ஞாநாதிகளை மேலும் விவரிக்கத் துடங்கி, யாக ரூபமான பகவதாராதநங்களையே செய்து பழகினவர்களுக்கு ப்ரும்ம ஜ்ஞாந அபிவ்ருத்தியின் பொருட்டு அநுபவத்தில் வரும் ஒவ்வொரு விஷயங்களிலும் யஜ்ஞ த்ருஷ்டியை ஒரு புறமும், பகவதுபாஸந ரூபமாகிய ஜ்ஞாநம் ஒரு புறமுமாகச் சேர்த்து அநுஷ்டிக்கும் ப்ரகாரம் வற்புறுத்தப்படுகிறது. கடைசியில் உபநிஷத் என்னும் தலைமையான பாகத்தில் தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும் ப்ரும்ம ஜ்ஞாநமே நேராக உபதேசிக்கப்பட்டு, மேல் ஸர்வாதிகாரமாய் ஸர்வ பலங்களையும் கொடுக்கவல்லதான சரணாகதியாகிய ந்யாஸம் என்னும் மோக்ஷ உபாயம், அதன் அநுஷ்டாநம் முதலியவைகள் பேசப்பட்டு, இப்படி தத்வ ஜ்ஞாந பூர்வகமாக விவேகத்துடன் தன்னை ஸர்வேச்வரனிடம் ஸமர்ப்பணம் செய்த தன் பிறகு இங்கிருந்த கால மெல்லாம் தினசரியாகச் செய்யும் அநுஷ்டாநாதிகளையே யஜ்ஞ த்ருஷ்டியால் பகவதர்ப்பண மாக்கித் தன் கார்யங்களை மோக்ஷ தசையில் அபேக்ஷிக்கும் புருஷார்த்தத்தின் முன்னுரையாகப் பாவிக்

கக் கடவனுய், பின்னர் இச் சரீரத்தின் முடிவே இவன் செய்த ஆத்ம ஸமர்ப்பண யாகத்துக்கு அவப்ருதமாய் முக்தி பெற்று 'மீட்சியில்லா வாழ்ச்சி'யென்னும் சாச்வதமான ப்ரும்மாநந்தந்தை யநுபவிப்பான் என்பது முடிவில் 'தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாந:' என்று துடங்கி உபதேசிக்கப்பட்டு இவ்விதமாய் வேதம் தலைக்கட்டிற்று.

எனவே, ஸர்வேச்வரனுய் ஸர்வ காரண பூதனுய், ஸர்வ கர்ம ஸமாராத்யனுய், ஸர்வ பலங்களையும் கொடுப்பவனுன பரப்ரும்ம மெனப்படும் புருஷோத்தமனே பரமமான தத்வ மென்று வேதத்தின் ப்ரதாந உபதேசமாயிற்று. தேவதைகளுக் கெல்லாம் அந்தர்யாமியா யிருந்து அவரவர்களுக்கு மனிதர்கள் யாகாதிகளால் செய்யும் பூஜைகளைத் தானுகந்து அபேக்ஷித பலங்களைக் கொடுப்பவ னென்று வேதத்தின் முதல் பாகத்தில் அறியப்பட்ட பர தத்வமே உபநிஷத்தின் ஆரம்பத்தில் ப்ரும்மம் என்னப்பட்டது. ''ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்று இந்த ப்ரும்மத்தை உபாஸிப்பவனுக்கு ஸர்வோத்க்ருஷ்டமான மோக்ஷம் பலமாகச் சொல்லப்பட்டது. ப்ரும்மத்தின் லக்ஷணம் அடுத்தாப்போல் 'யதோ வா இமாநி பூதாநி' என்று துடக்கமான வாக்யங்களால் 'உலகம் யாவும் எவனிடமிருந்து உண்டாயினவோ, எவனுல்தாங்கப்பட்டு ரக்ஷிக்கப்படுகின்றனவோ, எவனை நாடுகின்றனவோ, ப்ரளயத்தில் எவனிடத்தில் லயத்தை யடைகின்றனவோ' என்று விளக்கப்பட்டது. மேலும் ப்ரும்மமே பரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து அதில் தானே அநுப்ரவேசித்து தேவ மநுஷ்யாதி பூதங்கள், அசையும் பொருள் அசையாப் பொருள்கள், நித்ய அநித்ய வஸ்துக்கள், முதலிய ஸர்வங்களுமாகி, அவை யொன்றுலும் தான் சிதையாமே நிற்கும் நிலை 'ஸத்யஞ் சாந்ருதஞ்ச ஸத்யமபவத்' என்று காட்டப்பட்டது.

இப்படி ஸர்வத்துக்கும் காரணமாய், ஸர்வ சேதநா சேதநங்களுக்கும் ஆதாரமாய், ரக்ஷகனுய், நியமிக்கும் இறைவனுய், சேஷியாய், ஸ்ருஷ்டி முதலியவைகளைத் தன் லீலையாக நடத்தும் ப்ரும்மம் ஸ்வயமே நிரதிசய ஆநந்த ஸ்வரூப மாகையால், அவனுக்கே சேஷமாய்ப் பிரிக்கவொண்ணுத நிலையில் நிற்கும் தமது உண்மையை யறிந்து அவனை யுபாஸிக்கும் சேதநர்க்குத் தனதாகிய எல்லையில்லாத ஆநந்தாநுபவத்தையும் அதன் பெருக்கு வெள்ளமாகிய சேஷவ்ருத்தி யென்னும் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தையும், அந்தப் பரம்பொருளே உகந்து கொடுக்கிறது என்பதும் 'ரஸோ வை ஸ:' இத்யாதிகளில் சொல்லப்பட்டது.

இவ்வர்த்தங்களை யெல்லாம் திரட்டி உள்ளடக்கிக்கொண்டு, நமக்கும் ஈச்வரனுக்கு மிருக்கும் பிரிக்கவொண்ணுத சரீர ஆத்ம ஸம்பந்தத்தை முக்யமாக வெளியிட்டுக் கீழ்ச்சொன்ன பரப்ரும்மம் நாராயணன் என்று பிறகு

காட்டப்பட்டது. இவனே புருஷரூபனான பரனென்றும், உபாஸகர்களுடைய ஸௌகர்யத்துக்காக ‘ஸஹஸ்ருவாஸே’ இத்யாதிகளின்படியே ஸ்ரீ வைகுண்டம் ஸூர்ய மண்டலம் திருப்பாற்கடல் ஆகிய மூன்றிடங்களில் ஸேவை ஸாதிப்பதால் ‘த்ரியாஜா’ வெனப் பெயர் படைத்தவனென்றும், உபாஸகர்கள் அவரவ ரறிவுகளுக் கெட்டியபடி இறைவரென்று வழிபடும் ப்ரும்ம ருத்ர தந்தி துர்க்கி கருடாதி தேவதைகள் இவனுடைய விபூதிகளே என்றும் காட்டி, முடிவாக இப்பரம புருஷனே லக்ஷ்மீபதி யென்றும் சொல்லி, இவனை உள்ளபடி உபாஸிக்கும் ப்ரகாரத்தை உபநிஷத்து “நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி । தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்’ என்னும் விஷ்ணு காயத்ரீ மந்திரத்தால் உபதேசித்தது. [இதன் அர்த்தம்: ‘நாராயணனின் பொருட்டு உபாஸிக்கிறோம்; வாஸுதேவன் பொருட்டு த்யாநிக்கிறோம்; அந்த விஷ்ணு நம்மை நல்வழியில் நடத்தட்டும்] இதில் நாராயண சப்தத்தின் அர்த்தம் கீழே கூறப்பட்டது. ஆழ்வாரும் ‘நான் உன்னையின்றியிலேன் கண்டாய் நாரணனே நீ என்னையின்றி யிலை’ என்றதினால் நமக்கும் பகவானுக்கு முள்ள பிரிக்க வொண்ணாத ஆதார ஆதேயாதி ஸம்பந்தத்தையும், அதனடியாக ஏற்படும் பகவானுடைய ஸ்வபாவ ஸித்தமான காருண்யத்தையும், நாம் பரம புருஷார்த்த மென்று கோரும் ஸ்வரூப ப்ராப்தமான சேஷ வ்ருத்தியையும் காட்டி இந்நாராயண சப்தத்துக்கு வ்யாக்யாநம் அருளிச்செய்தார். வாஸுதேவ சப்தம் ‘கரந்தசி லிடந்தொறும் இடந்திகழ் பொருள் தொறும் கரந்தெங்கும் பரந்துளன்’ என்றபடியே அவன் ஸ்தூல ஸூக்ஷ்மங்களாகிய ஸர்வ வஸ்துக்களிலும் வ்யாபித்து வாஸம் பண்ணும் ப்ரகாரத்தை விளக்குகிறது. விஷ்ணு சப்தம் பகவான் புருஷோத்தம னென்பதையும், எல்லா சேதநா சேதநங்களிலுமுள்ள அவனுடைய ப்ரவேசமும் வ்யாப்தியும் (இருப்பும்) எப்போதும் சாச்வதமாய் இருப்பதையும் அவனுடைய ரக்ஷணாதி வ்யாபாரங்கள் தன்னுகப்பாய்த் தன் ப்ரயோஜநங்களா யிருப்பதையும் வற்புறுத்துகிறது. இப்படி, பகவத் ஸ்வரூபம், குணம், ஸம்பந்தம், வ்யாபாரம், ப்ரயோஜநம் முதலியவைகளை மனத்தில் தெளிவாக அநுஸந்தித்து அவனைச் சரணமடைவதே பரம புருஷார்த்தத்துக்கும் பரம ஸாதந மென்று இம்மந்த்ரம் சொல்லி ஸ்ரீ விஷ்ணுவே பரதத்வம் என்பதை நிலைநிறுத்திற்று. இத்தகைய விஷ்ணுவாகிற பரதேவதையை ப்ரதிபாதிக்கும் மதமே ஸ்ரீ வைஷ்ணவ மதம். இவரே த்ரிமூர்த்திகளில் நடுமூர்த்தியாய் ஜகத் ரக்ஷகனாய் அவதரித்திருக்கும் விஷ்ணு. இவ்வளவின்றிச் சிவனைப் பரதேவதையாகச் சொல்வது சைவ மென்றாற்போல் விஷ்ணுவைப் பரதேவதை யென்பது வைஷ்ணவ மென்பது நமது கொள்கையல்ல. சிவனையும் பிரமனையும் ஜீவர்க ளென்றும் அம்மூர்த்திகளில் அநுப்ரவேசித்துப் பகவான் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கிறான் என்னும் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தின் நிர்வாஹம் கீழ்ச்சொன்ன வைஷ்ணவ மத லக்ஷணத்துக்குக் குறை வுண்டாக்காது.

இவ்வித ஆலோசனைகளைக் கொண்டுதான் மேல் நாட்டு விமர்சகர்கள் ஔபநிஷத மதத்தில் புருஷ ரூபமான ப்ரும்மத்தை (Personal God or Deity) சொல்லும் மதம் வைஷ்ணவ மென்றார்கள். ருத்ரனும் சில விடங்களில் பரதேவதையாகச் சொல்லப்படுகிறான் என்றதும் இதற்கு விரோதமில்லை.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

# *வர்ணாச்ரம தர்மம்.

(ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

1. "அலௌகிக ச்ரேயஸ்ஸாதநம் தர்ம:" என்று அபியுக்தர்கள் கூறுகின்றனர்:—இதன் பொருள்—[உலகத்தில் கண் முதலிய இந்த்ரியங்களால் நேரில் காணப்படுகிற வஸ்துக்களைப் போலன்றிக்கே சாஸ்த்ரங்கொண்டே அறியவேண்டி இருக்கிறதும் இம்மையிலும் மறுமையிலும் ஸம்பவிக்கக்கூடிய எல்லா நன்மைகளுக்கும் எது தக்க ஸாதநமாகவுமிருக்கிறதோ அது தர்மம் என்பது.]

2. 'விதிவிஹித [illegible] தர்ம:' என்று ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

3. 'சோதநாலக்ஷணோऽர்த்தோ தர்ம:' என்பது ஜைமிநியின் பூர்வ மீமாம்ஸா ஸூத்ரம்.

4. 'தாரதி' உலகத்தையும் ஸ்வர்க்கத்தையும் எல்லா புருஷார்த்தங்களையும் தரித்துக்கொண்டு இருக்கிறது என்கிற அர்த்தத்துடன் கூடியது தர்ம சப்தம்.

5. 'தர்ம: ச்ருதோ வா த்ருஷ்டோ வா ஸ்ம்ருதோ வா கதிதோபி வா। அநுமோதிதோ வா ராஜேந்த்ர புநாதி புருஷம் ஸதா ॥' [ஹே சிறப்புற்ற வேந்தனே! தர்மம் கேட்கப்பட்டிருந்தாலும் பிறரால் அநுஷ்டிக்கப்படும்பொழுது பார்க்கப்பட்டாலும் நினைக்கப்பட்டாலும் சொல்லப்பட்டாலும் அநுமோதிக்கப்பட்டாலும், புருஷனை எப்பொழுதும் பரிசுத்தியுள்ளவனாகச் செய்கிறது.]

6. 'தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:। தஸ்மாத் தர்மம் ந த்யஜாமி மா நோ தர்மோ ஹதோऽவதீத் ॥' [கெடுக்கப்பட்டால் அந்தத் தர்மமே கெடுத்தவனை வதம் செய்கிறது. காப்பாற்றப்பட்டால் காப்பாற்றினவனைத் தர்மம் பாதுகாக்கிறது. ஆதலால் தர்மத்தை நான் கைவிடேன். கெடுக்கப்பட்டதாக இருந்துகொண்டு தர்மமானது நம்மை வதஞ்செய்யவேண்டாம்.]

---

* இது (1927ஞ மேமீ) வைகாசி மாஸத்தில் ஸ்ரீ புள்ளம் பூதங்குடியில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உ. வே. வித்வான் தட்டை. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி செய்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

7. '𑌪𑍁𑌰𑌾𑌣𑌨𑍍𑌯𑌾𑌯 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃। 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶॥' [விஷ்ணுபுராணம் முதலிய ஆறு ஸாத்விக புராணங்களும் ந்யாய சாஸ்த்ரமும் மீமாம்ஸையும் தர்ம சாஸ்த்ரங்களும் ஆறு அங்கங்களுடன் கூடிய நான்கு வேதங்களும் வித்தைகளுக்கும் அதாவது புருஷார்த்த ஸாதந ஜ்ஞாநங்களுக்கும் தர்மத்துக்கும் ஸ்தாநங்கள் (காரணங்கள்) என்றபடி.] இந்தத் தர்மத்துக்குக் காரக ஹேதுக்களும் ஜ்ஞாபக ஹேதுக்களும் நிர்ணய ஹேதுக்களும் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. காரக ஹேதுக்களாவன:—

8. '𑌦𑍇𑌶𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌉𑌪𑌾𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍। 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑍇 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌸𑌕𑌲𑌂 𑌧𑌰𑍍𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍॥' என்பவை. [நைமிசம் குருக்ஷேத்ரம் முதலிய தேசங்களிலும், க்ரஹணம் ஸங்க்ரமணம் அர்த்தோதயம் மஹோதயம் முதலிய புண்ய காலங்களிலும், சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ள இதி கர்த்தவ்யதையுடன் தக்க பாத்ரத்தில் ச்ரத்தையுடன் சேர்ந்து பொருள் ஈட்டப்படுகிற தென்பது யாதொன்றுண்டோ அவை அனைத்தும் தர்ம லக்ஷணம்; அவை தர்மத்துக்கு உத்பாதகங்கள்.] ஜ்ஞாபக ஹேதுக்களாவன:—

9. "𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌜𑌃 𑌕𑌾𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌮𑌿𑌦𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍॥" என்பவை. [ச்ருதி, மந்வாதி ஸ்ம்ருதிகள், தார்மிகர்களுடைய ஆசாரம், தன் உள்ளத்தின் ப்ரீதியுடன் கூடிய ப்ரவ்ருத்தி, நல்ல ஸங்கல்பத்தால் உண்டான காமம் இவை அனைத்தும் தர்மத்துக்கு மூலமென்று எண்ணப்பட்டிருக்கிறது. அதாவது, தர்மத்தினுடைய ஸ்வரூப ஸத்தையிலும் அதன் அநுஷ்டாநத்திலும் இவைகள் ஜ்ஞாபக ஹேதுக்கள்.] நிர்ணய ஹேதுக்களாவன:—

10. "𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌵𑍇𑌦𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑌰𑍍𑌷𑌤𑍍 𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑍇𑌵 𑌵𑌾। 𑌸𑌾 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 𑌯𑌂 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑍋 𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃॥" என்பவை. [வேதங்களையும் வேத விஹித தர்மங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் அறிந்தவர்களான நால்வர் சேர்ந்திருந்தாலும், அல்லது த்ரயீ நிஷ்ணாதர்களான மூவர் சேர்ந்திருந்தாலும் அது பரிஷத் எனக் கூறப்படுகிறது. அப்பரிஷத் எதைச் சொல்லுகிறதோ அது தர்மம். அல்லது வேதாந்த சாஸ்த்ரத்தை அறிந்தவர்களுக்குள் மிக்க சிறப்புற்ற ஒருவன் சொன்னாலும் அது தர்மமாகும்.] இந்த தர்மமானது ஆசாரத்தை அடியாகக் கொண்டது. இதற்கு நியந்தா பரமாத்மாவென்பது ச்ருதி ஸ்ம்ருதி புராண இதிஹாஸங்களில் ப்ரஸித்தம்.

இந்த தர்மமானது யுகந்தோறும் வேறுபட்டிருக்கிறது. தர்மமாகிற வ்ருஷபத்துக்குத் தபஸ், சௌசம், தயை, ஸத்யம் என நான்கு

பாதங்கள். இந்த நான்கு பாதங்களும் க்ருதயுகத்தில் நிலைபெற்றிருந் தன. பின்பு அதற்கு ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு காலாக ஒடிந்து கொண்டே வந்து கலியுகத்தில் ஒற்றைக் காலுடன் நடக்க முடியாமல் நொண்டியாய், அந்த வ்ருஷபமானது கீழே (தரையில்) வீழ்ந்து கிடப்பதாகத் தர்ம சாஸ்த்ரங்கள் பகர்கின்றன. இந்த தர்மமானது ச்ரௌதமென்றும் ஸ்மார்த்தமென்றும் இருவகைப் பட்டுள்ளது. வேதோக்தங்களான யஜ்ஞம் முதலியவை ச்ரௌத தர்மங்கள்; ஸ்ம்ருதியில் விதிக்கப்பட்டிருப்பவை ஸ்மார்த்த தர்மங்கள். அவைகள் வர்ண தர்மம், ஆச்ரம தர்மம், வர்ணாச்ரம தர்மம், ஜாதி தர்மம், நிமித்த தர்மம், குணதர்மமென்று ஆறுவிதமாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன.

வர்ணங்கள், ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைச்யன் சூத்ரன் என நான்கு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்திய சில போலிப் பண்டிதர்கள் "வர்ணங்களே கிடையா; அந்தணர்கள் வணிகர்கள் வேளாளர்கள் என்று மூன்றே வகுப்புக்கள்தான் உண்டு; இந்தப் பிரிவினையும் தொழிலை ஒட்டி வந்தது; எந்த வர்ணத்தானாக இருந்தாலும் சரி, எவன் ஜ்ஞானம் தவம் யோகம் த்யானம் இவைகளில் நிலைபெற்றிருப்பனோ அவன் தான் அந்தணன்; எவன் வ்யாபாரம் செய்கிறானோ அவனே வணிகன்; எவன் தொழில் செய்கிறானோ அவனே வேளாளன்; இதைத் தவிர தனித்து வர்ணங்களென்பது முற்றிலும் கிடையா" தென்று ப்ரத்யக்ஷத்தை அபலாபம் செய்கிறார்கள். அது அவர்களுடைய அறிவீனத்தன்மையையே காட்டுகிறது. ஏனெனில் இந்த வர்ணங்களின் பாகுபாடானது வேதத்தில் புருஷ ஸூக்தத்திலேயே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பகவத் கீதையிலும் கீதாசார்யன் 'குணங்களுடையவும் கர்மாக்களுடையவும் பாகுபாட்டோடு நான்கு வர்ணங்களும் என்னால் உண்டுபண்ணப்பட்டன'வென்று அருளிச்செய்திருக்கிறார். இவற்றுள் ப்ராஹ்மண வர்ணம் சிறந்தது. அது, ப்ரஹ்மத்தின் உத்தமாங்கத்திநின்று தோன்றினதினாலும், உத்பத்தி க்ரமத்தில் முதன்மை வாய்ந்திருப்பதாலும், வேதத்தை அத்யயநம் மநநம் தாரணம் செய்து காப்பாற்றுவதாலும், எல்லா வர்ணங்களைக்காட்டிலும் மேன்மை வாய்ந்துள்ளது. சராசரங்களுக்குள் உயிருள்ளவைகள் சிறந்த வஸ்துக்கள். உயிருள்ள வஸ்துக்களைவிட புத்தியைக்கொண்டு ஜீவிக்கும் ப்ராணிகள் மேன்மையுள்ளவை. புத்தியுள்ள ப்ராணிகளுக்குள் நரர்கள் சிறந்தவர்கள். அவர்களைக் காட்டிலும் ப்ராஹ்மணர்கள் மேன்மையுள்ளவர்கள். ப்ராஹ்மணர்க்குள் கற்றறிந்தவர் சிறந்தவர். கற்றறிந்தவர்களினும் ஸம்ஸ்காரம் வாய்ந்த புத்தியுள்ளவர்கள் மஹநீயர்கள். அவர்களைவிட அநுஷ்டாநம் செய்பவர்கள் பூஜ்யர்கள். அநுஷ்டாதாக்களைக்காட்டிலும் ப்ரஹ்மவாதிகள் மேன்மையுள்ளவர்கள். இவ்வாறு மனிதர்களுக்குள் ப்ராஹ்

மணர்களே மேன்மையுள்ளவர்க ளென்று கூறப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணனுடைய சரீரமானது உபபோகத்தின் பொருட்டு ஏற்பட்டதன்று; அது இம் மண்ணுலகில் தபஸ் வ்ரதாநுஷ்டாநங்களால் அளவிறந்த க்லேசத்தின் பொருட்டும் மறுமையில் அளவிறந்த ஸுகாநுபவத்தின் பொருட்டும் ப்ரஹ்மதேவனால் படைக்கப்பட்டிருக்கிறது. வெளி இந்த்ரியங்களை அடக்குதல், அந்த:கரணத்தை அடக்குதல், போக நியமந ரூபமாகவும் சாஸ்த்ர ஸித்தமாகவும் இருக்கிற காயக்லேசம், சாஸ்த்ரீய கர்மாக்களில் யோக்யதை, பொறுமை, மநோநுரூபமான பாஹ்யசேஷ்டை, பராவர தத்வ யாதாத்ம்ய ஜ்ஞாநம், பரதத்வத்தை அடைந்துள்ள அஸாதாரண விசேஷ விஷய ஜ்ஞாநம், வைதிகார்த்தம் முழுவதும் ஸத்யமென்கிற நிச்சயம், இவை அனைத்தும் ப்ராஹ்மணனுக்கு ஸ்வபாவ ஸித்தமான கர்மாக்களாகும். யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், வேதாத்யயநம் செய்தல், வேதத்தைப் பிறருக்கு ஓதுவித்தல், கொடுத்தல், ப்ரதிக்ரஹம் செய்தல் இந்த ஆறு கர்மங்களும் ப்ராஹ்மணனுக்கு அஸாதாரணங்கள். இவற்றுள் யஜநம் அத்யயநம் தாநம் இம்மூன்றும் ஆத்மார்த்தமாகவும், யாஜநம் அத்யாபநம் ப்ரதிக்ரஹம் இம்மூன்றும் வ்ருத்யர்த்தமாகவும் ப்ராஹ்மணனுக்கு ஏற்பட்டுள்ளன. ப்ரஹ்மதேவன் தவம் புரிந்து வேதங்களை ரக்ஷிப்பதற்காகவும், பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் த்ருப்தியை உண்டுபண்ணுவதற்காகவும், தர்ம ஸம்ரக்ஷணத்திற்காகவும் ப்ராஹ்மணர்களைப் படைத்தார். வேதாத்யயந ஸம்பந்நர்களான ப்ராஹ்மணர்கள் எல்லாவற்றுக்கும் ப்ரபுக்கள். அவர்களைவிட அநுஷ்டாந பரர்கள் சிறந்தவர்கள். அவர்களைவிட அத்யாத்ம சாஸ்த்ரத்தை நன்கு அறிந்தவர்கள் சிறந்தவர்கள். "ஸந்த்யாஸ்நாநம் ஜபோ ஹோமோ தேவதாநாஞ்ச பூஜநம்। ஆதித்யம் வைச்வதேவஞ்ச ஷட்கர்மாணி திநே திநே॥" [ஸந்த்யா வந்தநாத்யநுஷ்டாநாங்கமான ஸ்நாநம், காயத்ரீ முதலிய மந்த்ரங்களின் ஜபம், ஔபாஸநம் அல்லது அக்நிஹோத்ரம், தேவதாராதநம், வைச்வ தேவம், அதிதிஸத்காரம் இந்த ஆறு கர்மங்களும் ப்ராஹ்மணர்கள் நாள்தோறும் செய்யக்கூடிய நித்யகர்மங்கள்.] ப்ராஹ்மணர்களுக்கு எப்பொழுதும் ஸந்துஷ்டியே குடிகொண்டிருக்க வேண்டும். அவர்கள் ஸ்வதர்மங்களைத் தவறுதலின்றி அநுஷ்டித்து வரவேண்டும். ஸர்வ ப்ராணிகளிடங்களிலும் தயை இவர்களுக்கு ஸஹஜமாக இருக்கவேண்டியது. அஹங்காரத்தை இழப்பதுடன் இவர்கள் சாந்தியையே உள்ளும் புறமும் அலங்காரமாக அணிந்திருக்கவேண்டும். க்ஷத்ரியர்களுக்கும் வைசியர்களுக்கும் ப்ராஹ்மணர்களுக்குப்போல முற்கூறப்பட்ட யாகம அத்யயநம் தாநம் இம்மூன்றும் உண்டு. யாஜநம் அத்யாபநம் ப்ரதிக்ரஹம் இம்மூன்றிலும் இந்த இரண்டு வர்ணத்தார்களுக்கும் அதிகாரம் கிடையாது. தவிரவும், க்ஷத்ரியனுக்கு யுத்தத்தில்

பயமற்று நுழையும்வல்லமை, சத்ருக்களால் அவமதிக்கக்கூடாத திறமை, தொடங்கின கார்யத்தை முடிவுபெறச்செய்கிற ஸாமர்த்யம், எல்லாக் கார்யங்களையும் நிறைவேற்றுகிற சக்தி, யுத்தத்தில் புறங்காட்டி ஓடாமை, கொடை, எல்லோரையும் நியமநம் பண்ணுகிற ஸாமர்த்யம் இவை அனைத்தும் ஸ்வபாவஸித்தமான கர்மாக்கள். ஸஸ்யோத்பாதநார்த்தமான கர்ஷணம், பசுபாலநம், தநஸம்பாதந ஹேது பூதமாயும் க்ரய விக்ரய ரூபமாயும் உள்ள செய்கை, இவைகள் வைச்யனுக்கு ஸ்வபாவ ஸித்தமான கர்மங்கள். சூத்ரனுக்கு மூன்று வர்ணத்தார்களின் பரிசர்யையானது ஸ்வபாவ ஸித்தமான கர்மாவாகும்.

ஆச்ரமம் என்பது ப்ரஹ்மசர்யம் கார்ஹஸ்த்யம் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் என நால்வகைப் பட்டுள்ளது. ஒருவனுக்குப் பால்யம் கௌமாரம் யௌவநம் வார்த்தகம் என்கிற வயோவஸ்தைகள் க்ரமமாக மாறிமாறி வருவனபோல் இந்த ஆச்ரமங்களும் முறையே வருகிற அவஸ்தா விசேஷங்கள். இந்த நான்கு ஆச்ரமங்களும் ப்ராஹ்மணனுக்கே உரியன. க்ஷத்ரியர்களுக்கும் இவை உண்டென்பது சிலர் கொள்கை. சாஸ்த்ர ஸாரார்த்த வேதிகள், ஸந்யஸமின்றி மற்ற முந்திய மூன்று ஆச்ரமங்கள்தான் க்ஷத்ரியனுக்கு உண்டென்று பகர்கின்றனர் த்விஜர்களென்கிற முதல் மூன்று வர்ணத்தார்களுக்கும், த்விஜத்வ ஸித்திக்கு ஹேதுவான ஸர்வோத்தமமான ஆச்ரமம் ப்ரஹ்மசர்யம். ப்ராஹ்மணர்களுக்கு உரித்தாயும் வைதமாயுள்ள நாற்பத்தெட்டு ஸம்ஸ்காரங்களுக்குள் முக்ய ஸம்ஸ்காரமாக விளங்குகிற உபநயநத்தால் ஸித்தித்த த்விஜத்வத்தை முன்னிட்டு அநுஷ்டிக்கப்படுகிற வேதாத்யயந வ்ரதாநுஷ்டாநமே ப்ரஹ்மசர்யமென்று சொல்லப்படுகிறது. ப்ரஹ்மம் என்றால் வேதம்; அதை அத்யயநம் செய்வதற்காக அநுஷ்டிக்கப்படும் வ்ரதமும் ப்ரஹ்மம்; அதின் சர்யை அநுஷ்டாநம்; இவை இந்த ஆச்ரமத்தில் இருப்பதால் இதற்கு ப்ரஹ்மசர்யம் என்று பெயர். இந்த உபநயநமானது வேதாத்யயநத்துக்கு அங்கம். உப ஸமீபத்தில், நயநம் வேதவித்யாக்ரஹணார்த்தம் சிஷ்யனைச் சேர்ப்பித்தல். இது இந்தக் கர்மாவில் இருப்பதால் இதற்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. ஆபஸ்தம்ப தர்மத்தில் "𑌉𑌪𑌨𑌯𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃" என்று இதற்கு மஹர்ஷி லக்ஷணம் கூறி இருக்கிறார். இந்த உபநயநமானது ப்ராஹ்மணனுக்குக் கர்ப்பாஷ்டம வர்ஷத்திலாவது ஜந்மாஷ்டம வர்ஷத்திலாவது செய்யவேண்டுமென்றும், க்ஷத்ரியனுக்குப் பதினோராவது வயதிலும், வைச்யனுக்குப் பன்னிரண்டாவது வர்ஷத்திலும் செய்யப்படவேண்டுமென்றும் சாஸ்த்ரம் கூறுகிறது. இந்த உபநயந ஸம்ஸ்காரம் மாணவகனைச் சார்ந்தது. காம்ய உபநயநங்களுக்கு ஏழாவது வர்ஷமும், ஒன்பது பத்துப் பதினொன்று பன்னிரண்டாவது வர்ஷங்களும் உரித்தான காலங்களாக குறிக்கப்பட்டிருக்கின்றன இந்த உபநயநமான பிறகு, மாணவகன் வித்யா க்ரஹணத்திற்காகக் குருகுல

வாஸம் செய்துகொண்டும், நியமாத்யயநத்தைச் செய்துகொண்டும் பிக்ஷை எடுத்துப் புஜிக்கவேண்டும். இதில் வேத மாதாவான காயத்ரீ உபதேசத்தினால் முன் ஜந்மாவை விட மிக்க ஏற்றமுள்ளதானவித்யா ஜந்ம மேற்படுவதால் இந்த ஸம்ஸ்காரம் மேன்மை வாய்ந்துள்ளது. ஆசார்யனாகிற பிதாவானவன் வித்யை என்கிற மாதாவுடன் சேர்ந்து இந்த உயர்ந்த ப்ரஹ்ம ஜந்மத்தை உண்டுபண்ணுகிறான். வேத வேதாங்கங்களை நியமத்துடன் அத்யயநம் செய்வதற்காக மாணவகன் குருகுலத்தில் 48 அல்லது 36 அல்லது 24 அல்லது 12 ஸம்வத்ஸரம் வஸிக்கவேண்டும். கார்ஹஸ்த்யத்தில் விருப்பமுள்ள மாணவகன் அத்யயநம் முடிந்த பிறகு ஸ்நாதக வ்ரதத்தை அநுஷ்டித்து, குரு தக்ஷிணையை ஸமர்ப்பித்து விட்டு, ஆசார்ய நியமநம் பெற்றுக்கொண்டு தன் வீடுவந்து சேரவேண்டும். இவனுக்குத் தான் உபகுர்வாணன் என்று பெயர். இல்லற வாழ்க்கையில் ஆசையைத் துறந்து, உயிருள்ள வரையில் ஆசார்யாதீநமாகவே இருந்து, அவருக்குச் சுச்ரூஷை முதலியவற்றைச் செய்துகொண்டு வாழ்நாளைக் கழிப்பவன் நைஷ்டிகன். குருகுலத்திலிருந்து நியமத்துடன் மூன்று வேதங்களையோ இரண்டு வேதங்களையோ ஒரு வேதத்தையோ முறைப்படி ஓதி, ப்ரஹ்மசர்யத்தில் நிலைதவறாமலிருந்துவிட்டு ப்ரஜா வ்ருத்தி செய்ய, தன் ஸந்ததியைத் தழைக்கச்செய்ய எண்ணங் கொண்டவன் லக்ஷணவதியான ஸ்த்ரீயை விவாஹம் செய்துகொண்டு க்ருஹஸ்த தர்மத்தை அநுஷ்டிக்கக் கடவன். இரண்டாவது ஆச்ரமம் கார்ஹஸ்த்யம். இது எல்லா ஆச்ரமங்களையும்விட உயர்ந்தது. ஏனெனில் ப்ரஹ்மசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் பிக்ஷை அளிக்கும்படியான பாக்யத்தை உடையதாக இருத்தலாலும், அதிதி ஸத்காரம் செய்து பகவத் பாகவத முகோல்லாஸத்தை அநவரதம் செய்யக்கூடிய தன்மை வாய்ந்திருத்தலாலும் இது மேன்மை பெற்றுள்ளது. மற்ற மூன்று ஆச்ரமஸ்தர்களுக்கும் இதுவே ஆதாரமாக இருந்துவருகிறது. 'ஸவெ-ஷாவகாஶ க்ஷ ஶாஶ்ரமே' என்று கவி சிகாமணியும் சொன்னான். தாரபரிக்ரஹம் செய்துகொண்டு ஐஹலௌகிக பாரலௌகிக தர்மங்களை அநுஷ்டிப்பதிலும், ஸத் ஸந்ததியை வ்ருத்தியடையச் செய்வதிலும் இந்த ஆச்ரமத்துக்கு முக்யமான நோக்கு. இந்த ஆச்ரமத்தில் புருஷனுக்குப் பத்நீ ஸம்பந்தத்தால் அக்நி ஸித்தியும், தர்ம ஸித்தியும், ஆநுஷங்கிகமான ஐஹிக ஸுக ஸித்தியும், நிச்ரேயஸ ஸித்தியும் உண்டாகின்றன. 'பத்யுர்நோ யஜ்ஞஸம்யோகே' என்பது பாணினி ஸூத்ரம். யஜ்ஞம் முதலிய தர்ம கார்யங்களை அநுஷ்டிப்பதால் புருஷனுக்கு உண்டாகும் ஸுக்ருதத்தில் சரிபாதி அம்சத்தை அடைய பாத்யமுள்ளவளாக இருப்பதால் பார்யைக்குப் பத்நீ என்று பெயர். தர்ம கார்யத்தில் ஸஹசாரிணியாக இருப்பவள் பத்நீ. லீலா ஸஹசாரிணியாக இருப்பவள் வயஸ்யை. தேவதைகள் பித்ருக்கள் அதிதிகள் இவர்களுக்கு த்ருப்திகரமாயும் வைதமாயுமுள்ள கர்மாநுஷ்டாந ஸமயத்தில் அவள் சிஷ்யை. போக காலத்தில் காந்தை. மற்ற ஸமயங்களில் பார்யை

யாக இருந்து பர்த்தாவைப் போஷித்து வருவள். தர்மத்துக்கு அவிருத்த மான அர்த்த காமங்களேயும் தர்மத்தையும் பத்நியுடன் சேர்ந்து அநுஷ்டித்து க்ருஹஸ்தன் ஸித்தி யடைகிறான். த்ரேதாக்நியையோ ஔபாஸநாக்நியையோ யாவஜ்ஜீவம் நன்கு ஸம்ரக்ஷித்துக்கொண்டு ஹவ்ய கவ்யாதிகளால் தேவாதிகளே ஆராதித்து மனிதன் க்ருதார்த்தனுவதற்கு இந்த ஆச்ரமமே தகுதியானது. ப்ராஹ்மணன் பிறககும்பொழுதே மூன்று கடன்களேச் சுமந்துகொண்டே பிறக்கிறான். ப்ரஹ்மசர்யத்தால் ரிஷிகளுக்கும், யஜ்ஞத்தினுல் தேவதைகளுக்கும் ஸந்ததியினுல் பித்ருக்களுக்கும் இவன் கடனேத் தீர்க்கக் கட்டுப்பட்டவன். இக்கடன் மூன்றையும் க்ருஹஸ்தன் ஒருவன் தான் தீர்ப்பதற்கு ஸ்வரூப யோக்யதை யுள்ளவன். மற்ற ஆச்ரமிகள் பித்ருக்களுடைய கடனேத் தீர்க்கச் சக்தியுள்ளவ ராகார். பஞ்ச மஹா யஜ்ஞங்கள் பஞ்சஸூநா ப்ராயச்சித்தார்த்தமாகத் தவருமல் அநுஷ்டிக்கப்பட வேண்டும். அபிகமநம், உபாதாநம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்கிற காலபஞ்சகங்களில் செய்யத்தக்க கர்மாக்களே ச்ரத்தையுடன் தவருமல் அநுஷ்டித்து க்ருஹமேதிகள் ச்ரேயஸ்ஸை அடையத்தக்கவர்கள். "வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் । விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யத்தத்தோஷகாரக:" [தன் வர்ணத்துக்கும் ஆச்ரமத்துக்கும் உரித்தான ஆசாரமுடைய புருஷனுல் பரம புருஷனை விஷ்ணு ஆராதிக்கப்படுகிருர். அவனே ஸந்தோஷப்படுத்துவதற்கு இதைவிட வேறு வழி கிடையாது.] என்று அபியுக்தர்கள் கூறி இருக்கின்றனர்.

"அப்ரயத்நாகதா ஹ்யேதே க்ருஹஸ்தே விஷயா: ஸதா ।
ப்ரயத்நேநாபி கர்தவ்ய: ஸ்வதர்ம இதி மே மதி: ॥"

[க்ருஹஸ்தர்களால் தன் ப்ரயத்நமின்றி நேர்ந்திருக்கிற விஷயங்கள் எப்பொழுதும் அநுபவிக்கத் தக்கவைகள். ஸ்வதர்மமோவென்றுல் ப்ரயத்நத்தினுலேயே செய்யத்தகுந்த தென்பது என் எண்ணம்.] ப்ராஹ்மணனுக்கு சாஸ்த்ரீயங்களான நாற்பது ஸம்ஸ்காரங்களேத் தவிர்த்து எட்டு ஆத்மகுணங்கள் அவசியம் இருத்தல்வேண்டும். அவைகளாவன—தயை, க்ஷமை, அநஸூயை, சௌசம், அநாயாஸம், மங்களம்' அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை. முற்கூறப்பட்டுள்ள சாஸ்த்ரீய ஸம்ஸ்காரங்களில் சிலகுறைந்தாலும் தோஷமில்லை. ஆத்மகுணங்கள் மாத்ரம் பரிபூர்ணமாக இருக்கவேண்டும். கர்மாக்கள் பகவானுடைய ஆராதநரூபங்கள். நித்யநைமித்திக காம்யகர்மாக்களே அநுஷ்டிக்கும்ஸமயத்தில் கர்த்ருத்வத்தையும் ஸங்கத்தையும் பலத்தையும் த்யாகம் செய்து, 'செய்யவேண்டியகடமை' என்கிற எண்ணத்துடனே அவற்றைச் செய்யவேண்டும். கர்ப்பாதாநம்

முதல் ஸமாவர்த்தநம் ஈறாக உள்ள ஸம்ஸ்காரங்கள் ப்ராஹ்மங்கள். பாக யஜ்ஞத்தில் முதன்மை வாய்ந்திருக்கிற அஷ்டகை தொடங்கி ஸோம ஸம்ஸ்தையில் ஈறாக இருக்கிற அப்தோர்யாமம் ஈறாக உள்ள ஸம்ஸ்காரங்கள் தைவங்கள். ப்ராஹ்ம ஸம்ஸ்காரத்தால் ஒருவன் ரிஷிகளுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான்; தைவ ஸம்ஸ்காரத்தால் தேவர்களுடைய ஸாயுஜ்யத்தையும் ஸாலோக்யத்தையும் அடைகிறான்.

வாநப்ரஸ்தாச்ரமம் மூன்றாவது. இல்லறத்தைத் துறந்து கானகம் சென்று அபக்வங்களான கந்த மூல பலங்களை ஆஹாரமாகக் கொண்டு இந்த்ரியங்களை அடக்கித் தபஸ்ஸினாலும் அஷ்டாங்க யோகத்தினாலும் பகவானை நேரில் பார்ப்பதுபோல் விசதமாக த்யானித்துக் கடைசியில் யோகாக்நியினால் தேகத்தை எரித்துப் பகவத் ஸாயுஜ்யம் பெறுகிற பாக்யவான்களால் ஆச்ரயிக்கத்தக்கது இது.

நான்காவது ஸந்யாஸாச்ரமம். இது தாரேஷணை வித்தேஷணை லோகேஷணை இவை மூன்றையும் துறந்த துறவிகளால் ஆச்ரயிக்கத்தக்கது. இது மோக்ஷாச்ரமம். குடீசகர்கள், பஹூதகர்கள், ஹம்ஸர்கள், பரமஹம்ஸர்களென்று இவ்வாச்ரமிகள் நான்கு வகைப்பட்டிருக்கின்றனர். இவ்வாச்ரமிகளுக்கு ஏதாவது ஸ்வதர்மத்தில் ஸ்காலித்ய முண்டானால் ப்ராயச்சித்தமே கிடையாது. அவர்களுக்குப் பரலோகத்தில் இந்த்ர தண்டனையே ஒழிய யம தண்டனை கிடையாது. இவர்கள் லோஹத்தைத் தீண்டலாகாது; நகரங்களில் ப்ரவேசிக்கக் கூடாது; க்ராமைக ராத்ரம் வாஸம் செய்யவேண்டும். க்ராமங்களுக்கு வெளியிலுள்ள தோட்டங்களிலும் புண்யாயதநங்களிலும் ஆச்ரமங்களிலும் இவர்கள் வஸிக்கவேண்டியவர்கள். புகை நெருப்பு உலக்கை சப்தம் இவை அனைத்தும் ஓய்ந்த பிறகு க்ராமத்தில் பிக்ஷார்த்தமாக ஸந்யாஸி ப்ரவேசிக்கவேண்டும். ம்ருஷ்டாந்நத்தையும், அப்யஞ்ஜநத்தையும், புஷ்பம் முதலியவற்றையும் ஸுககரமான சயநாஸநங்களையும் ஸந்யாஸிகள் விலக்கவேண்டும். விரித்து உரைத்தால் வ்யாஸம் வளரும் என்கிற எண்ணத்தால் இத்துடன் உபஸம்ஹரிக்கிறேன்.

---

174

ஸ்ரீ:

# கம்பர் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்குச் செய்தருளிய பேருதவிகள்.

(திரு. அ. இராமகிருஷ்ண சடகோபதாஸர்.)

(தொடர்ச்சி—276-ம் பக்கம்)

விஷ்ணு அம்ச ஸ்ரீராமபிரானை உயர்த்தி அவரை ஒரு முழு முதற் பொருளாமென்று கம்பர் விளங்கக் கூறுமாறுபோல் வான்மீகர் கூறக் கண்டோம் இல்லை. என்றாலும், வான்மீக மஹரிஷி கடவுளோடு ஒன்று பட்ட தன்மையாம் கடுந் தவத்தினர் ஆதலின், ஸ்ரீராமனது பெருமையையும் அவதார விசேஷத்தையும், சூசகமாக இரண்டோர் இடங்களில் உய்த் துணர வைத்திருக்கின்றார். வால்மீகர், கோசலாதேவியை நோக்கிச் சுமித்திரை பேசும் கூற்றாக வைத்து, "ஸ்ரீராமன் சூர்யனுக்குட் சூர்யனும், அக்கினிக்குள் அக்கினியாயும், கடவுளுக்குக் கடவுளாயும், இலட்சுமிக்கு இலட்சுமியாயும், கீர்த்திக்குக் கீர்த்தியாயும் பொறுமைக்குப் பொறுமையாயும், தெய்வங்களுக்குள் தெய்வமாயும், பூதங்களுக்குள் உள்ளும் புறம்பும் நிறைந்துள்ள பூதமாயும் விளங்குகின்றனன்" 1 என்றும், பிரம்மா முதலிய தேவர்கள் கூற்றால், வைத்து "பிரம்மாவும் நீர்தான்; மூன்று லோகங்களுக்கும் ஆதிகர்த்தாவும் நீர்தான்; சுயம்பிரபு நீர்தான்; ருத்திரர்களுக்குள் எட்டாவது ருத்திரனான மகாதேவனும் நீர்தான்;............சத்துரு சம்ஹாரராகிய ஸ்ரீராமா! நீர்தான் ஜகத் உற்பத்தியிலும் பிரளயகாலத்திலும் காணப்படுகின்றீர்;................. லட்சுமீபதியாயும் சக்ரதரனும் பிரபுவாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணன் நீர்தான்;..............அக்ஷரமும் பிரமமும் சத்தியமும் நீர்தான்; ராகவா! நீர் பிறப்பு வளர்ச்சி இறப்பு இம்மூன்றும் இல்லாதவர்; நீரே லோகங்களுக்கெல்லாம் முக்கியமான தர்மஸ்வரூபி;....................நீரே விஷ்ணு;.......... ...................................உம்முடைய பிறப்பையும் இறப்பையும் அறிந்தோர் இல்லை; நீரே சர்வ பூதங்களுடைய இருதயத்திலும், பிராம்மணர்களிடத்திலும், பசுக்களிடத்திலும், திக்குகளிலும், ஆகாசத்திலும், பருவதங்களிலும் வனங்களிலும் காணப்படுகின்றீர்;................................ ......... லட்சுமியே சீதை; நீரே விஷ்ணு."2 என்றும் அருளியிருக்கின்றார். கம்பரோ, என்னில், இவ்வாக்கியங்களையே பெருக்கிச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு, ஆங்காங்கு ஸ்ரீராமனை விசேடித்துக்கூறுகின்றார்.

---

1. வான்மீக ராமாயணம், அயோத்யா காண்டம்: 44-வது ஸர்க்கம்.
2. வான்மீக ராமாரணம், யுத்த காண்டம்: 120-வது ஸர்க்கம்.

175



நந்தேசத்தில், மதம் அல்லது சமயம் என்பது தெய்வக்கொள்கை என்ற பொருளிலேயே அமைகின்றது. கம்பர் எந்த மதக்கொள்கையிற் சார்ந்தோர் என்றாராய்ந்தால், 'அவர் சைவரா? அல்லது வைஷ்ணவரா? அல்லது பொது நோக்குடையவரா?' என்ற சந்தேகம் உண்டாகின்றதாம். ஸ்ரீ. அ. நாராயணசாமி அய்யர் என்பார், "..................பிற்காலத்தில் மதப்பற்றுடைய சிலர் சில பாடல்களை அப்படியே பாடி இடையிற் செருகி * இருக்கலாம்; இதனால், இவர் வைஷ்ணவரென்று சொல்வதற்கு இடமில்லை" என்கிறார். ஸ்ரீ. செல்வக்கேசவராய முதலியார், † "கம்பர் சைவரோ வைஷ்ணவரோ" என்றாரம்பித்துச் சில விஷயங்களைச் சொல்லிக்கொண்டு போய் முடிவில் இவரை வைஷ்ணவர் என்று குறிப்பிடுகின்றார். ‡ ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் என்பார், இவரைப் பொதுநோக் குடையவரென்கிறார். இன்னுஞ் சிலர் இவரைச் சைவரே என்கின்றனர். அவரவர்கள் தத்தமக்கு ஆதாரமாயுள்ள சில செய்யுள்களையும் குறிக்கின்றனர். ஸ்ரீகோவிந்தராஜ அய்யங்கார் அவர்கள், "...........ஒரு மூர்த்தியின்பால் காட்டும் துவேஷம் அம்மூர்த்தி முதல்வனை பரம்பொருளிடத்திலும் நெருங்குமென்றும், ஆனால் ஒவ்வொரு ஜீவரும் தங்கள் தங்களது வாசனை அறிவு ஆராய்ச்சிக் கேற்ப ஒரு மூர்த்தியை அவலம்பித்துப் பக்திசெய்தல் அவசியமென்றும், நாமரூபங்களின் மயங்காது ஒரே மனநிலையையுடைய பெரியோர்க்கு இம்மூர்த்தி வணக்கமும் அம்மூர்த்தித் துவேஷமும் சேரமாட்டாவென்றும் கொள்ளும் உயரிய பொதுக் கொள்கையை உடையாரென்றே கிடைக்கின்றது" †† என்கிறார். இந்த உயரிய நோக்கத்தைக் கம்பர் கைக்கொண்டவரே தான். மா, பலா, வாழை என்னு முப்பழங்களின் ரசத்தை ஒருமிக்க ஒரு குடுவையிற் பெய்து நன்றாய்க் கலக்கிப் பின்னர் சிறிது நாழிகை சென்று ருசிபார்த்தால், இந்த மூன்

* இடைச்செருகல் என்று எல்லாவற்றிற்குமே சொல்லிவிடக் கூடாது. சந்தர்ப்பங்கள் தோறும் காணப்படும் அருமையான பாடல்களும், ஸ்ரீராமபிரானுக்குக் கொடுத்திருக்கும் நூற்றுக்கணக்கான உயர்ந்த அடைமொழிகளும், விஷ்ணு பாரம்மியத்தையே பெரும்பாலும் குறிக்கின்றன. அப்பிரயோகங்கள் எல்லாம் சொல்லிலும் பொருளிலும் மிக அருமையாகவும் ஆழமாகவும் தோன்றுகின்றன; மேலும் அவை வேதார்த்தங்களைப் பிரதிபாதிக்கின்றன. இடைச்செருகல் என்பது காலவேற்றுமையால், நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு தான் விழலாம். ஆகவே நூற்றுக்கணக்கான பாடல்களையும் அடைமொழிகளையும் எல்லாம் இடைச்செருகல் என்று எப்படிச் சொல்லமுடியும்? இடைச்செருகல் இடைச்செருகல் என்று சொல்லிக்கொண்டே போனால், இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளே தேவையில்லை.

† கம்ப நாடர் நூல்.

‡ செந்தமிழ்ப் பத்திரிகையில் கம்பராமாயண இன்கவித்திரட்டு என்னும் பாகத்தை எழுதிவரும் புலவர்.

†† கம்பநாடர் பத்திரிகை மதக்கொள்கை, பக்கம் 21.

றற்கும் இல்லாத புதிய தனிச்சுவை யொன்று பிறக்கின்றது. அச்சுவை தெளியமிழ்தாய் நுனிநாக்கிலிருந்து அடிவயிறு வரைக்கும் முனைத்து ருசிகரமாய் நிற்கின்றது. இந்த ருசியை அநுபவித்த ஒருவன், மாச் சாற்றையாதல், பலாச் சாற்றையாதல், வாழைச் சாற்றையாதல், இது தாழ்வு, அது உயர்வு, என்னுது மூன்றையும் உடன்போற்றி, மூன்றினின்றும் பிறந்த சுவையை உண்டு களிக்கின்றுன். அதுபோலவே, பிரம, விஷ்ணு, சிவன் என்னும் முப்பொருள்களின் சாரமாகிய ஒரு தனிப்பொருள் அலாதியாய் நிற்க, அதனை ஞானமார்க்கத்தால் அன்பு பொருத்தி உண்டு களிக்கும் ஒருவனுக்குப் பொருள் துவேஷம் எங்கு நின்று உண்டாகும்? அத்தனிப்பொருளே, உலகரக்ஷணார்த்தம் மூவகையாய்த் தோன்றியது என்னவே, அப்பொருள் எதுதான் ஆகும் என்ற சங்கை பிறக்கலாம். அச்சங்கைக்கு உத்தரமாக அப்பொருள் நாராயணனே என்று பெறப்படுகின்றது. அந் நாராயணனே மூன்றுய் விரிதலும் தனித்தலும் செய்ய வல்லவன் என்று கூறப்படுகின்றது. படவே மூர்த்தித் துவேஷம் எங்கிருந்து வரும்? வராதன்றே? ஆகவே, வைஷ்ணவப் பெரியோர், மூன்று கவடாய் முளைத்தெழுந்த முதல்வனாகிய ஒருவன் ஸ்ரீமந்நாராயணனே என்பாதலின், அவ்வொருவனையே பற்றுக்கோடாக நிற்பர். நிற்கவே, அவ்வொரு மூர்த்தியின் அம்சபூதர்களாகிய ஏனைய மூர்த்திகளை வித்தியாசம் பாராட்டாமலும் துவேஷம் பாராட்டாமலும், ஒப்பற்ற அந்த ஒரு மூர்த்தியையே உபாசிப்பர். உபாசிக்கும்போது, மற்றைய மூர்த்திகளது விஷய சந்தர்ப்பம் ஏதேனும் வந்தால், அவ்விடத்தில் அவர்களைத் தாழ்வாகக் கூறமாட்டார்; தாங்கொண்ட மூர்த்தியோடு உடன் போற்றுதலுஞ் செய்வர். அதற்குத் திருவாய்மொழியே எடுத்துக் காட்டாம். இந்த நோக்குதான் உயர்ந்த பொதுக் கொள்கையை யுடைய சிறந்த குணம் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

சிரேஷ்டமான இந்த உபரிய கொள்கையைக் கொண்ட நம்மாழ்வாரை, தமது அந்தரங்க ஆசான் * எனக்கொண்ட கம்பர் இந்நோக்கமாகிய அரிய குணத்திலே நின்றவராய்த் தமது கொள்கையை நாட்டிஞர். தம்முடைய சிறந்த இந்த கொள்கையைக் கம்பர்,

‡ "உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே."

---

* நம்மாழ்வாரைக் கம்பர், தமக்கு அந்தரங்க ஆசானுகக் கொண்டமை, திருவாய்மொழியின் அரும்பெரும் பொருள்களை அப்படியே எடுத்துத் தம் நூலில் ஆண்டமையாலும், காப்புச் செய்யுள்களில் முதற்கண்ணே அவரைத் துதித்தமையாலும், அவருக்கென தனிநூலொன்று செய்தமையாலும் பெறப்படும். இவ்விஷயங்களைப் பிறிதோர் ஆராய்ச்சியிற் கூறுவாம்.

‡ கம். ராமா. சிறப்புப்பாயிர முதற் செய்யுள்.

என்றசெய்யுளில் அமைக்கின்றார். இதன்பொருள்:—[உலகங்கள் எல்லாம் (எப்போதும்) உள்ளவைகளாகவே படைத்தலும், (படைக்கப்பட்ட அவ்வுலகங்களைக்)காத்தலும், பிறகு அவற்றை (த்தமது இச்சையால்) அழித்தலுமாகிய அளவு இல்லாத விளையாட்டை உடையவர் எவரோ,அவரே, (எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்களுக்கும்) தலைமை முதற்பொருள் ஆவர்; அப்பேர்ப்பட்டவர்க்கே இந்த (உலகங்களும் உயிர்களும்) அடைக்கலப் பொருள்கள் ஆகும்] என்பதாம். நம் எதிரே காணும் உலகத்தை உற்று நோக்குவதினாலேயே தெளிவாக நமக்குக் கடவுள் ஞானம் உண்டாகும். இதுபற்றியே கம்பர் உலகங்களைக் கொண்டு, கடவுளுடைய சாக்ஷாத்காரத்தை உய்த்துணர வைத்திருக்கின்றார். இராமாயணம் முழுமையும் இந்தப் பொருளை ஸ்ரீ ராமனைக்கொண்டு நடைபெறுகின்றது. காண்டந்தோறும் வரும் காப்புச் செய்யுள்களும் இதனையே வற்புறுத்திக் கூறுகின்றன.

* "தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணஞ் சிந்தித் திமைபா திருப்பரே
அவ்வண்ண மாழியா னும்."

என்ற அருளிச் செயல்படிக்கு, இறைவனுக்கு நாமாக இடும் பெயரே பெயராமாகலின், அவனுக்கென ஒரு பெயருங் கிடையாது. உருவமும் அப்படியே. ஒரு பெயரும் ஓர் உருவமும் இல்லாத ஜோதிஸ்வரூபமான கடவுளை இயற்கைப்படியே முதற்கண் பேர் ஒன்று மின்றிப் பொதுவாகவே கூறினர். பின்னரே அவனுக்குப் பெயரிட்டுக் கூறுகின்றார்.

† "உயர்வற உயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"

என்ற செய்யுளும் இந்த ரீதியிலே அருளிச் செய்யப் பட்டமை காண்க.

இந்த முதற் பாட்டைக்கொண்டு கம்பர், சைவமும் வைஷ்ணவமும் அல்லாத பொது நோக்குடையோர் என்னல் ஆகாது என்போமாயின், ஆழ்வார்களிற் சிரேஷ்டரானவரும் பரமாசாரியரும் ஆன சடகோபாழ்வாரையும் அவ்வாறு கூற நேரும். ஆகவே ஆஸ்திகர்கள் யாவரும், இந்த முதற் பாட்டு நாராயண அம்சமாகிய ஸ்ரீராமநாமத்தை உட்கொண்டு எழுந்தது என்றே கொள்ளல்வேண்டும். மத சித்தாந்த ரீதியில் பார்க்கும்போது, கம்பர், வீரவைஷ்ணவ சித்தாந்தி அல்லர்; மற்று, அவர் சமரச பாகவத சிரேஷ்டரே

* பொய்கை யாழ்வார் முதற்றிருவந்தாதி பாசுரம் 44.

† திருவாய்மொழி முதற் பத்து முதற் செய்யுள்.

178



யாவர். அங்ஙனமே சடகோபரும் பொய்கையாரும் அமைந்த தன்மையைத் திருவாய்மொழியையும், முதற் றிருவந்தாதியையும் கொண்டு அறிக.

கம்பர், இம்முதற் செய்யுளில், நாராயணனது அமிசமாகிய ஸ்ரீராம பிரானை முழு முதற்கடவுள் என உய்த்துணர வைத்து, இரண்டாஞ் செய்யுளில், "எண்ணப்பட்ட ஸாத்விக ராஜஸ தாமஸ குணங்களில், முதற் குணமாகிய சத்துவ குணத்தைக் கொண்டவரே முதன்மையாவர்" என்கிறார். வைதிக சாஸ்திரங்கள் விஷ்ணுவையே சாத்துவிகக் கடவுள் என்று கூறுகின்றன. ஸ்ரீராமன் விஷ்ணு அமிசம் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்று. இதனானும், அந்தக் கடவுள் ஸ்ரீராமனே என்று கம்பர் சூசிப்பிக்கின்றார். மூன்றாஞ் செய்யுளில், "பற்றற்ற பெரியோர், சாத்விகத் தொழிலாகிய நல்ல குணத்தையுடைய ஹரியென்னும் பகவானுடைய திருவடிகளையே பற்றுவரன்றி ஏனைய தொன்றினையும் பற்றமாட்டார்" என்கிறார். இந்தச் செய்யுளில், தம் கருத்திற்கொண்டதையே—ஒப்பற்ற அந்த ஹரியமிச மூர்த்தியையே—கம்பர் வற்புறுத்தித் தமக்கு ஏற்புடைக் கடவுளாகவும் வழிபடு கடவுளாகவும் கொண்ட ஸ்ரீராமபிரானை 'அரி' என்ற பெயரை இட்டு அழைக்கின்றார். 'அரி' என்னுங் கடவுள் நாராயணனே; நாராயணனது அமிசமே ஸ்ரீராமன் ஆதலின், கம்பர் இவ்வாறு கூறினர் என்க.

இந்த முதல் மூன்று பாட்டுக்களிலும், கம்பர், தம்மை ஒரு பாகவதர் என்று காட்டினமை அறிக. அவர் ஸ்ரீராமனது அவதாரத்தை விசேஷித்துக் கூறும்போது,

* "ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந் தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை."

என்று மிக விசேடித்துக் கூறுகின்றார். இதன்பொருள்: [அண்டங்களை எல்லாம் ஒருபகலிலே தன்னுடைய திருவயிற்றிலே அடக்கி, அருமையான வேதங்களுக்கும் உணர்தற்கு அரியவனாய் எட்டப்படாமல் இருப்பவனும், அஞ்சனக் குழம்பையொத்த கரிய மேகத்தினது கொழுந்தின் அழகையெல்லாம் காட்டுகின்ற சோதிவடிவனும் ஆகிய திருமாலை, அறிவாற் சிறந்த கோசலா தேவி மிகவும் அழகிதாகப் பெற்றெடுத்தனள்] என்பதாம். திருமாலாகிய ஸ்ரீராம பிரானுக்குக் கம்பர் கொடுத்திருக்கும் உயர்ந்த அருமையான அடைமொழிகளைப் பாருங்கள். இவ்விடத்தில் கம்பர் வேதத்துக்கும் 'அருமை' என்னும் பதத்தைப் பிரயோகிக்கின்றார்; இறைவற்கும் அதே பதத்தைப் பிரயோகிக்கின்றார். இதனால், கடவுளை யொழிந்த ஏனைத் தேவர்கட் கெல்லாம், உயிர்கட்கெல்லாம், வேதம், எட்டப்படாத அவ்வளவு அருமையை

* கம்ப. ரா. பால. காண். திருவவதாரப்படலம் செ. 104.

179



உடைத்து என்றும், அவ் வருமை வேதத்திற்கும் காண்பதற்கு அரிய அருமை வாய்ந்த மஹாவிஷ்ணு என்றும் பெறப்படுகின்றன. படவே அருமைக்கும் அருமையான, அதாவது தலைவர்க்கும் தலைவனான, அதாவது எல்லா அண்டங்களுக்கும், எல்லாத் தெய்வங்களுக்கும், எல்லா உயிர்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் நாயகனாகிய—தலைமை முதற்பொருளாகிய—ஸ்ரீராமன், சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்தனன் என்றுணர்தல் வேண்டும். கம்பர், விதிசிவாதிகளைப் பற்றி இரண்டோர் இடங்களில் எவ்வளவு தான் உயர்த்திக் கூறினும், இவ்வருமை வாசகங்களுக்கு ஈடாகுமா கவனியுங்கள். இன்னம் ஸ்ரீ ராமனுக்குப் பெயரிடுந் தறுவாயைக் கூறும்போது,

‡ "கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொருளுக்கே
இராம னெனப் பெய ரீந்தன னன்றே."

என்று, (சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்த குழைந்தைக்கு) இராமன் என்று பெயரிட்டார்கள் என்கிறார். இதன் பொருள்: [முதலையைப் பிடிக்க மிகவும் தளர்ச்சியை அடைந்த யானை, சேஷ சயனத்தின்மீது யோக நித்திரை என்னும் அறிதுயிலைச் செய்கின்றவனே! ஆதி மூலமே! என்று கூவியழைத்தபோது, விரைந்தோடி வந்து அவ்யானையைக் காத்தருளிய மெய்ம்மைப் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய அமிசமாகப் பூலோகத்தில் அவதரித்திருக்கும் அக்குழந்தைக்கு அந் நாராயணப் பொருளையே தரவல்ல ஸ்ரீராமன் என்ற பெயரால் நாமகரணஞ் சூட்டி மகிழ்ந்தார்கள்] என்பதாம். மஹா நாதமும், கம்பீரமும், அருமையும், பெருமையும் வாய்ந்த இந்த வாசகத்தைப் பாருங்கள். இவ்விடத்தில், 'அந்தப் பொருளையே தரவல்ல' என்பதற்கு ராமன் என்னும் பதம் 'ரமிக்கச் செய்பவன்' என்று பொருள்படும்; அதாவது, பிறவுயிர் துன்பம் அடைந்த காலை, அவ்வுயிரை அத்துன்பத்தினின்றும் நீக்கிக் காப்பாற்றி அதனைக் களிக்கச் செய்தலாம்; காத்தற் கடவுளாகிய நாராயணனுக்கே இந்தச் சிறப்புக் குணம் உரியதாகலின், நாராயண அமிசமாய்த் தோன்றி உலகோருடைய துன்பங் களைந்து ரமிக்கச் செய்யுங் குழந்தைக்கு, நாராயணப் பொருளையே தரவல்ல ஸ்ரீராம நாமம் இட்டார்கள் என்றறிதற்பாற்று. இனிக் காத்தற்றொழிலை, ஏனை படைப்பு சங்காரத் தொழில்களை விடச் சிறந்ததும் அருமையானதுமாம். இவ்விரு தொழில்களும் அம்முதற்றொழிலிலேயே (காத்தல்தொழில்) அடங்கும். அடங்கவே பிரமனும் சிவனும், விஷ்ணு என்ற மூர்த்திக்குள் அடக்கமாவார்கள்.* ஆகவே, விஷ்ணுதான் முதற்கடவுள் என்ற உண்மை

‡ கம்ப. ரா. பால காண். திருவவதாரப்படலம். செ. 120.

* இவ்விஷயத்தை, எமது 'சமயம்' என்னும் வியாசத்து இரண்டாம் பாகத்தில் விளக்கமாகவும் விரிவாகவும் எழுதி வருகின்றோம். ஆண்டுக் காணலாம்.

180



போதரும். தாவே, படைப்பு சங்கார கர்த்தர்களாகிய பிரமன் சிவன் என்னுந் தேவர்கள், காத்தற் கடவுளாகிய விஷ்ணுவுக்கே சகல உரிமைகளும் உள வென்றும், யானையின் இடரை நீக்கும் ஆற்றல் தமக்கு இல்லையென்றும், அதன் கூக்குரலுக்கு வாளா இருந்துவிட்டனர் என்க. இந்நுண்மை கண்டதனலன்றே, கம்பர் காத்தற்கடவுளாகிய மெய்ம்மைப் பொருளை ஸ்ரீராமன் என்கிறார். இதனையே, கம்பர் தம் நூலில் அநேக இடங்களில் விசேடித்துக் கூறுகின்றார்.

‡ "கடுத்தகாரங் கதுவனிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே! பரமே! யென்
றெடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்."

என்ற அருமைச் செய்யுளைக் கவனித்துப் பாருங்கள். இதனால், கம்பர் எப்பேர்ப்பட்ட சுத்த வைஷ்ணவர் என்பதை உணருங்கள். இங்ஙனம் உணரும் ஆற்றல் இன்றிப் பலபடப் பேசுவதில் பயன் ஏதும் பெறப்பட மாட்டாது. இந்த இரண்டு பாட்டுக்களும், கம்ப ராமாயணத்திற்கு நாயக மணிகளாய் விளங்குகின்றன. கம்பர் இவைதம்மைப் போன்ற செய்யுள்களைப் பிறவிடங்களிற் கூறினும், இந்த முதல் சந்தர்ப்பத்தில் உண்மையை ஒளிக்காது உரைத்தது மிகவும் சிறந்தது என்பதையும் ஆராய்ந்து பாருங்கள். இங்ஙனமாக ஸ்ரீராமன்மேல் எழுந்த பேரன்பினால், கம்பர், சிறப்புப்பாயிர முதன் மூன்று செய்யுள்களாகிய அஸ்திவாரத்தைப் போட்டு, அவற்றினின்றும் இவ்விரண்டு செய்யுள்களாகிய சுவர்களை யெழுப்பி, இனிக் கூரை வேய்தலாகிய விஷ்ணு பாரம்மியத்தைக் கூறி, அழகியதாகிய ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தை நாட்டி, நம்மனோர்க்கெல்லாம் களிபெரு மகிழ்ச்சியைத் தருகின்றார். அவை வருமாறு :—

பாலகாண்டம், திருவவதாரப் படலம், 8-வது செய்யுளாகிய,

* "கறைமிடற் றிறைவனுங் கடவு ளோர்களும்
மறைமுதற் கிழவனை வந்து நண்ணலும்
முறைமையிற் கடன்முறை முற்றி முண்டகத்
திறைவனு மவரொடு மினிதி னேகினான்."

என்பதில், சிவபெருமானும் தேவர்களும் பிரமதேவனிடம் சென்று, குறையைச் சொல்லி முறையிடலும், பிரமனும் அவர்களுடன் (இக்குறையைத் தீர்ப்பதற்கு நம்மில் எவர்க்கும் ஆற்றல் கிடையாது ; எல்லா ஆற்றலும் பொருந்தியவன் விஷ்ணுவே யாதலின், அப்பரமனால்தான் இக்குறையைத் தீர்த்துக்கொள்ள முடியும்; அவரிடம் செல்வோம், எழுமின் என்று சொல்லிப்)

‡ கம்ப. ரா. ஆர. காண். விராதன் வதைப்படலம் செ. 48.

*. இந்தச் செய்யுள், கம்பநாடர் பத்திரிகாசியரால் விடப்பட்டிருக்கின்றது.

போனதாகப் பெறப்படுகிறது கம்பர் சுத்த வைஷ்ணவராய் இராவிடின், ஈண்டு இச்செய்யுளை ஏன் பாடவேண்டும்? விஷ்ணு சிவனிடம் சென்றதாக எங்கானும் பெறப்படுகின்றதா? அறிவுடையோரே கூறுக.

2. "என்றுநான் முகன்முதல் யாரும் யாவையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடும்
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே."

பால. காண். கடிமணப்படலம். 49.

3. "முப்பரம் பொருளிற்குண் முதலை மூலத்தை
இப்பாந் துடைத்தவ ரெய்து மின்பத்தை
அப்பனை யப்பினுள ளிர்தந் தன்னையே
ஒப்பனை யொப்பனை யுரைக்க வொண்ணுமோ."

ஷை ஷை 69.

4. "வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேந்தை."

அயோ. காண். காப்புச்செய்யுள்.]

5. "தழைத்ததண் டுளவினேன் தலைவ னல்லனென்
றழைத்தவ னறநெறி யந்தணாளரிற்
பிழைத்தவன் பிழைப்பிலா மறையைப் பேணலா
திழைத்தவன் பொய்யெனு மிழுதை நெஞ்சினேன்."

ஷை காண். பள்ளியடைப் படலம் செ. 99.

6. "வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினே டொன்றாவ்வாப்
பூதங்கள் தொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ."

ஆர. காண். விராதன் வதைப்படலம் செ. 47.

7. "பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதல்தேவர் என்கொண்டென் செய்வாரே."

ஷை காண். ஷை பட. செ. 51.

8. "மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தா னாகாதோ வுனக்கென்ன குறையுண்டோ

வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
ஐயத்தாற் சிறிதையஞ் தவிர்ந்தாரும் உளரையா."

ஷி காண். ஷி பட செ. 58.

9. "துவசமார் தொல்லமருட் டுன்னாரைச் செற்றுஞ்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள் கற்பித்துந்
திவசமா நல்லறத்தின் செந்நெறியில் உய்த்துந்
திருவளித்தும் வீடளித்துஞ் சிங்காமைத் தங்கள்
தவசமா யாருயிராய்த் தவமாய்க் கண்ணாய்க்
கடையிலா ஞானமாய்க் காப்பானைக் காணு
அவசமாய்ச் சிந்தையழிந் தயலே நின்றான்
அறியாதான் போல வறிந்தவெலாஞ் சொல்வான்."

ஷி காண். சரபங்கர் பிறப்பு நீங்குபடலம் செ. 26

10. "வல்லை வரம்பில்லா மாயவினை தன்னால்
மயங்கின ரோடெய்தி மதிமயங்கி மேனாள்
அல்லை இறைவன்நீ யாதியெனப் பேதுற்
றலமருவே முன்னையறப் பய னுண்டாக
எல்லை வலயங்கள் நின்னுழையென் றந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவரென நின்ற
தொல்லை முதன்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற ஐயந் துடைத்திலையோ எந்தாய்."

ஷி காண். ஷி பட. செ. 31.

11. "செய்தா யேனுந் தீவினை யோடும் பழியல்லால்
எய்தா தெய்தா தெய்தி னிராமன் உலகீன்றான்
.................................................................
................................................................."

ஷி காண். மாரீசன் வதைப்படலம் செ. 182

12. "முத்தேவரின் மூலமு தற்பொருளாம்
அத்தேவரிம் மானிட ராதலினால்
எத்தேவரொ டெண்ணுவ தெண்ணமிலாப்
பித்தேறினை யாதல் பிழைத்தனையால்."

ஷி காண். சடாயு உயிர்நீத்தபடலம் செ. 100.

13. "என்னையங் கெய்திய தியம்பு வாயென
அன்னவ னஃதெலா மறியக் கூறலும்
இன்னலு மூவகையு மிரண்டு மெய்தினான்
தன்னலா தொருபொருள் தனக்கு மேலிலான்."

ஷி காண். அயோமுகிப் படலம் செ. 86.

14. "மூலமே யில்லா முதல்வனே நீமுயலுங்
கோலமே யார்க்குந் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ! ஆலி னடையோ! அடைகிடந்த
பாலனோ! ஆதிப் பரனோ! பகராயே."

ஷி காண். கவந்தன் படலம் செ. 43.

15. "ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேதமுரை செய்தால் வெள்காரோ வேறுள்ளார்."

ஷி காண். ஷி பட. செ. 45.

16. "...........................................................................
...........................................................................
...........................................................................
முன்னிவற் கிதுவென் றெண்ண லாவதோர் மூல மில்லான்."

ஷி காண். சவரி பிறப்பு நீங்குபடலம். செ. 2.

17. "மும்மைசா லுலகுக்கெல்லாம் மூலமந் திரத்தைமுற்றும்
தம்மையே தமர்க்குநல்குந் தனிப்பெரும் பதத்தைத்தானே
இம்மையே யெழுமைநோய்க்கு மருந்தினை யிராமனென்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களிற் றெரியக்கண்டான்."

கிஷ். காண். வாலி வதைப்படலம். செ. 71.

18. "...........................................................
...........................................................
மூவர்நீ முதல்வன்நீ முற்றுநீ மற்றுநீ
பாவம்நீ தருமம்நீ பகையுநீ உறவுநீ."

ஷி காண். ஷி பட. செ. 121.

19. *"மாவலச் சூலியார் வாழ்த்துநர்க் குயர்வரம்
ஓவலற் றுதவநின் னொருதனிப் பெயரியம்
பாவலிப் புடைமையா லாகுமப் பொருளையாம்
தேவநிற் கண்டவெற் கரிதெனோ தேரினே."

ஷி காண். ஷி பட. செ. 123.

20. "பாலமை தவிர்நீ யென்சொற் பற்றுதி யென்னி னைய
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக் குற்ற தம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த."

ஷி காண். ஷி பட. செ. 148.

* இச்செய்யுளை ஓர் ஏட்டுப் பிரதியிற் கண்டது.

21. "வாரா தொழியா னெனும்வன் மையினால்
ஓரா யிரகோடி யிடர்க் குடையேன்
தீரா வொருநாள் வலிசே வகனே
நாரா யணனே தனிநா யகனே !"

சுந். காண். உருக்காட்டுப்படலம். செ. 6

22. "ஐயனு மமைந்துநின்றா னாழியா னளவில்நாமம்
நெய்சுடர் விளக்கிற்றோன்றும் நெற்றியே நெற்றியாக
மொய்ம்மயிர்ச் சேனைபொங்க முரணயி லுகிர்வாள்மொய்த்த
கைகளே கைகளாகக் கடைக்கூழை திருவா லாக."

ஷடி காண். சம்புமாலிவதைப் படலம் செ. 21.

23. "அனையவன் யாரென வறிதி யாதியேல்
முனைவரு மமரரும் மூவர் தேவரும்
எனையவ ரெனையவர் யாவர் யாவையும்
நினைவரு மிருவினை முடிக்க நின்றுளோன்."

ஷடி காண். பிணிவீட்டுப் படலம் செ. 75.

24. "போதமும் பொருந்து கேள்விப் புரையறு பயனும் பொய்தீர்
மாதவஞ் சார்ந்த தீரா வரங்களு மற்றும் முற்றும்
யாதவ னினைந்தா னன்ன பயத்தன வேது வேண்டின்
வேதமும் அறனுஞ் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன்."

ஷடி காண். ஷடி பட. செ. 78.

25. "காரணங் கேட்டியாயின் கடையிலா மறையின்கண்ணும்
ஆரணங் காட்டமாட்டா வறிவினுக் கறிவுமன்றோன்
போரணங் கிடங்கர்கௌவப் பொதுநின்று முதலேயென்ற
வாரணங் காக்கவந்தா னமரரைக் காக்கவந்தான்."

ஷடி காண். ஷடி பட. செ. 79.

26. "அனையவன் சிறுவரெம் பெருமவுன் பகைஞரா னவரையம்மா
இனையரென் றுணர்தியே விருவரும் ஒருவரும் எதிர்கிலாதார்
முனைவரும் அமரரும் முழுதுணர்ந் தவர்களும் முற்று மற்றும்
நினைவரும் தகையர்நம் வினையினால் மனிசராய் எளிதில்நின்றார்."

உயு. காண். மந்திரப் படலம். செ. 85.

27. "காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தால்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேள்நமோ நாராய ணாய."

ஷடி காண். இரணியன் வதைப்படலம் செ. 42.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணநாயிகாஸமேத ஸௌரிராஜ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ சௌரிராஜனின் வைபவ விசேஷம்.

(ஆரியூர்—"திருமகள் நிலயம்"—ஆ. வ. பத்மநாபராமாநுஜ தாஸன்.)

"உத்பலாவதகே திவ்யே விமானே புஷ்கரேக்ஷணம் ।
ஸௌரிராஜ மஹம் வந்தே ஸதா ஸர்வாங்கஸுந்தரம் ॥"

திருமாமகள் கொழுநனான எம்பெருமான், சேதனர்கள் வழிபட்டு உய்யுமாறு இப் புண்ணிய பூமியில் அர்ச்சாவதாரங் கொண்டு விளங்கும் திவ்யஸ்தலங்கள் பற்பல. அவற்றுள், மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டனவும் இப்பரத கண்டத்திலிருப்பனவுமாய திவ்யதேசங்கள் நூற்றெட்டு. அவற்றுள் சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதாம். அவற்றுள் பதினேழாவது திவ்யதேசமாக விளங்குவது திருக்கண்ணபுரம். அஃது, பஞ்சகிருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்களுள் தலைமை பெற்று விளங்குவதுமாம். மாறன் அருளிய தமிழ் மறைக்கு ஆறங்கங் கூற அவதரித்த அருள்மாரி திருவாய் மலர்ந்தருளிய ஒரு நூறு பாசுரங்களைப் பெற்று விளங்கும் பெருமையுடையது அது. அத்தகைய திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீசௌரி ராஜனுக்கே சிறப்பாக உரியனவாய சில அஸாதாரண வைபவ விசேஷங்களைச் சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருநறையூர் நம்பி பக்கலில் சங்க சக்ர முத்திரைகளைப் பெற்று, வயலாலி மணவாளனால் மந்த்ரோபதேசம் பெற்ற திருமங்கை மன்னன், அம்மந்த்ரஸித்தி பெற்ற இடமும் ஸ்ரீ சௌரிராஜன் ஸந்நிதியேயாம். இஃது

"மற்றுமோர் தெய்வ முளதென்றி ருப்பாரோடு
உற்றிலேன் ; உற்றதும் உன்னடியார்க் கடிமை
மற்றெல்லாம் பேசிலும், நின் திருவெட்டெழுத்தும்
கற்றுநான் கண்ணபுரத்துறை அம்மானே !"

எனும் பாசுரத்தால் இனிது புலனாகும். தான் மந்த்ரஸித்தியடைந்த மகிழ்ச்சியினால், பெரிய திருமொழியில்—எட்டாம்பத்து முழுவதும்—ஒருநூறு பாசுரங்களால், அவ்வெம் பெருமானிடத்தில் கலியன் ஈடுபட்டிருப்பதும் கவனிக்கத் தக்கது.

அப்பாசுரங்களனைத்தையும் ஆராயத் தொடங்கினால், மிகப் பெருகுமாதலின் அவற்றின் ஸாராம்சத்தை மட்டும் சுருக்கமாகக் கூறுவோம்:—

முதல் திருமொழியில், தலைமகனிடத்தில் ஈடுபட்ட தலைமகளது செயல் கண்ட தாய் வியந்து விளம்புவதும், பின்னர் தலைமகனை இயற்பழித்தும் தலைமகளது இளமைக்கு இரங்கி இயம்புவதும், தலைமகனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறுவதும், அவனிடத்து ஈடுபட்டு துயர் ஆற்றாது தும்பியை நோக்கி நுவல்வதும், அந்திப் பொழுதில் அவன் வராது நீட்டிக்கத் தென்றல் முதலியவற்றால் வருந்தி மொழிவதும், தலைவனது அவதாரங்களை அனுபவிப்பதும் சிந்தைக்கும் சொல்வதற்கும் தேனினும் இனியவாய்த் திகழ்கின்றன.

க்ஷேத்திரம், வனம், நதி, கடல், நகரம், புஷ்கரிணி, விமானம் முதலிய ஏழும் புனிதத்தன்மையுடையனவாக ஒரே இடத்தில் சேர்ந்திருப்பது மிகமிக அரிதாம். அவ்வேழினுள் ஒன்றேனும் புண்ணியமாக அமையாதொழின், அவ்விடத்தில் திருவஷ்டாக்ஷர ஸித்தி திருந்தாதாகலின், அவ்வேழும் ஒருங்கே அமைந்துள்ள திருக்கண்ணபுரமே திருமந்த்ர ஸித்திக்கு ஏற்ற விடமென்று ஸ்தல புராணம் கூறுகிறது*.

ஸ்ரீ சௌரிராஜன் எழுந்தருளி யிருக்கும் விமானம், பிரதக்ஷிணம் செய்யும் போது கட்புலனாகாதவாறு கட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. உடலை உபேக்ஷிக்கின்ற முமுக்ஷுக்களைக் காத்தருளும் கடவுள் எழுந்தருளி யிருக்கும் விமானமாதல்பற்றி அஃது 'உத்பலாவதகம்' எனும் பெயர் பெறும். இது பற்றியே, "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று இவ் வெம்பெருமானை நம்மாழ்வார் சிறப்பித்ததும். மற்றும் அத்தலத்துப் புஷ்கரிணியில் கங்கை முதலிய ஸர்வ புண்ய தீர்த்தங்களும் நித்யமாக வாசம் செய்வதால் அஃது 'நித்ய புஷ்கரிணி' எனப்படும். நம்மாழ்வார் அருளிய "மாலைநண்ணித் தொழுது" எனத் தொடங்கும் பாசுரங்களில் "வேலை மோதும் மதிள்; வெள்ளி யேய்ந்த மதிள்; வானை யுந்தும் மதிள்; அரணமைந்த மதிள்; நன்பொனேய்ந்த மதிள்; மணிபொனேய்ந்த மதிள்; கல்லிலேய்ந்த மதிள்" என வருமாறு ஒரு காலத்தில் அவ்வாலயம் ஏழு மதிள்களை யுடைத்தா யிருந்தது. அவற்றுள் இப்பொழுது ஆறு மதிள்கள் காணப்படவில்லை. அதன் காரணத்தைப் பின்வருமாறு பெரியோர் கூறுவர்:—

"பற்பலவிடங்களில் விஷ்ணுவாலயங்களை இடித்துச் சிவலிங்க பிரதிஷ்டை செய்துகொண்டு வந்த கிருமிகண்ட சோழன் என்பானொரு அரசன் திருக்கண்ணபுரம் சென்று, ஆலயத்தின் மதிள்கள் ஆறினையும் இடித்துக்கொண்டு போய்த்

---

* "𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌵𑌨𑌂 𑌨𑌦𑍀 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 𑌪𑍁𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀 𑌤𑌥𑌾 ।
𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌸𑌪𑍍𑌤 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌨𑌿 𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑍇 𑌸𑍍𑌥𑌲𑌂 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥
𑌤𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌦𑌂 𑌸𑌤𑍍𑌵𑌰𑌂 𑌸𑌂𑌪𑌦𑍇 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌥𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥"

திருமருகல் திருப்புகலூர் முதலிய சிவாலயங்களைக் கட்டுவித்து, ஏழாவது மதிளையும் இடிக்கப்புகுவ தறிந்த அரையர் ஒருவர் திராவிடவேத ஸேவாகாலத்தின் போது அதை நினைந்து மனம் நொந்தவராய், "கருணைக்கடலே! கருவரைபோல் நின்றானே!! மிக்க பாபியும் பகவத்வேஷியுமான இம்மன்னன் நின் ஆலயத்தின் ஆறுமதிள்களையும் அழித்தவளவோ டமையாது இதோ ஏழாவது மதிளையும் இடிக்கப்போகின்றானே, உனக்கென்ன கண் தெரியவில்லையோ?" என்று சொல்லித் தனது திருக்கையில் இருந்த தாளத்தினால் ஸ்ரீசௌரிராஜனது நெற்றியில் ஓங்கி அடிக்கலானார். உடனே அப்பெருமானது திருக்கரத்தில் விளங்கும் சக்கரமானது சடக்கெனப் புறப்பட்டு அவ்வரசனது கழுத்தை அறுத்து வீழ்த்திக் கடல்மூழ்கி எம்பெருமானின் திருக்கையிலே வந்து நின்றது." அவ்வுண்மைக்கு அறிகுறியாய், இன்றைக்கும் ஸ்ரீசௌரிராஜனின் திருநெற்றியில் தாளத்தா லடிபட்ட தழும்பும் திருக்கரத்தில் ப்ரயோக சக்கரமும் விளங்குவதை நன்கு ஸேவிக்கலாம். என்னே எம்பெருமான் தன்மை இருந்தவாறு! அடியாரிடத்தில் அடியும்பட்ட அடிகளின் ஸௌலப்யத்தை என்னென்ன வர்ணிப்பது?

மற்றும், 'வைநதேயகிரி' என்னும் மலை, அத்திவ்யதேசத்தின் கீழெல்லையாக அமைந்துளது. இந்திரன் முதலியோரை வென்று, மிக்க செருக்கடைந்து ஆகாயத்தில் திரிந்துகொண்டுவந்த பெரியதிருவடி, திருக்கண்ணபுர க்ஷேத்ரபாலர்களை அவமதித்த காரணத்தினால், தனது ஆற்றல் ஒடுங்கி, முன்னொரு காலத்தில் மலைகளின் சிறகுகளையெல்லாம் அறுத்துவந்த அமரேசனுக்கு அஞ்சிக் கடலில் ஒளித்திருந்த அம்மலையின்மீது விழலானார். அதனிலிருந்து தன் துயர் நீங்குமாறு அச்சுதனை நோக்கித் தவஞ் செய்த அவர்முன், பல வருடங்கள் கடந்த பின்னர் ஸ்ரீ சௌரிராஜன் கருணைகூர்ந்து காட்சியளித்தருளினன். பெரியதிருவடியின் அபசாரத்தைப் பொறுத்தருளிய சௌரியும் அவரது விண்ணப்பத்திற் கிணங்க அவர் தன்னருகிலேயே எப்பொழுதும் நித்யவாசம் செய்து வருமாறும், ஆண்டுக் கொருமுறை அவர்மீது ஆரோகணித்துவந்து அவரை ஆதரித்த அம்மலைக்குக் காட்சி தருவதாகவும் வரமளித்து மறைந்தருளினன். அவ்வாறே இப்பொழுதுகூட ஸ்ரீ சௌரிப்பெருமாளுக்கு எதிரிலேயே பெரியதிருவடியையும் எழுந்தருளச் செய்து வருவதும், ஸ்ரீ சௌரியும் வருடந்தோறும் மாசிமகத் தன்று பெரிய திருவடிமேல் ஆரோகணித்து மேற்கூறிய கடற்கரைக்குச்சென்று, அப்பர்வதத்திற்குக் காட்சி கொடுத்துவருவதும் இனிது நடைபெற்று வருகின்றன.

முனியோதரன் என்பனொரு மன்னன் விண்ணப்பத்திற் கிணங்க, ஸ்ரீ சௌரிப்பெருமாள் தினந்தோறும் இரவில் 'முனியோதரன் பொங்கல்' எனும் ப்ரஸாதத்தை அமுது செய்தருளுகிறார். அஃது ஸாமான்ய ப்ரஸாதமாகவன்றி, ஸர்வ உபாதிநிவாரண பரமௌஷதம் போலவும் உபயோகப்பட்டு வருவது குறிப்பிடற்பாலது.

அயோத்தியிலிருந்து அரங்கநாயகனை இலங்கைக்கு எடுத்துச்சென்ற வழியில், திருவரங்கத்தினின்றும் அப்பெருமானைப் பெயர்த்தெடுக்க முடியாது, அவ்விடத்திலேயே

அரங்கனை எழுந்தருளச்செய்த விபீஷணுழ்வான், ஸ்ரீ அழகிய மணவாளனது கட்டளைக் கேற்பக் 'கீழைவீடு' எனப்படும் திருக்கண்ணபுரம் சார்ந்து ஸ்ரீசௌரியை ஸேவித்து மகிழ்ந்தார். அவருக்காகப் பிரதி அமாவாசைதோறும் 'தெற்கு நோக்கிய ஸேவை' என்ற திருக்கைத்தல ஸேவை ஸாதிப்பது இப்பொழுதும் நடைபெற்று வருகிறது.

மற்றும், ஸ்ரீசௌரிப்பெருமாள் சாத்திக்கொள்ளும் திருவாபரணங்கள் அஸாதாரண விசேஷங்களையுடையனவாம். கலிய னருளிய பாசுரங்களில்:—

"சிலையிலங்கு பொன்னுழி திண்படைதண் டொண்சார்ங்க மென்கின்றாளால்", "மின்னுமா மணிமகர குண்டலங்கள் வில்வீசு மென்கின்றாளால்" எனவரும் அடிகளுக் கிணங்க சங்கு சக்கரம் தண்டு முதலியவற்றோடு விளைந்த வாள் ஒன்றும், அழகிய வில் ஒன்றும் சாத்திக்கொள்வதோடு, இருதிருச் செவிகளிலும் (கர்நாடக காலத்திய) மகர குண்டலங்களும் அணிந்து ஸேவை ஸாதிப்பது ஆனந்தந் தருவதாயிருக்கின்றது. மற்றும், கருட பர்வதத்தின் தவத்திற் கிரங்கி அதற்குக் காட்சியளித்தபோது, திருத்தோள் வளைகள் திருக்கை மணிக்கட்டில் விளங்கக்கண்ட அவ்வெற்பு, பெரிதும் வியந்து அதன் காரணமென்னென்று வினவியபோது, ஸ்ரீசௌரியும் "சோழநாட்டு வேந்தனுக்கும் பாண்டிய நாட்டு மன்னனுக்கும் சம்பந்தத்தை அமைத்தபோது, பாண்டியன் ஸமர்ப்பித்த தோள்வளையை எனது தோளில் அணியக் கருதி மணிக்கட்டில் நுழைத்ததும், அதனைக் கண்ட அவனும் 'இவ்வணியை இங்கே அணிவதே பரமபோக்யமாயிராநின்றது' என்ன, அங்ஙனமே யானும் அதை அணிந்துகொண்டேன்" என்று பதிலிறுத்தருளியதாக ஸ்தலபுராணம் கூறுகிறது. அத்திருவாபரணமும், இன்றும் ஸ்ரீ சௌரிப் பெருமாள் திருமேனியில் விளங்கக் காணலாம். ஸ்ரீ சௌரியின் மாஹாத்ம்யத்தை முழுவதும் எடுத்துரைப்பது எவருக்கும் அரிதாகலான், அதி முக்கியமானவைகளுட் சிலமட்டும் இங்கு உரைக்கப்பட்டன.

ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணிகாள்! அருளிச்செயல்களில் ஆர்வமுடைய அறிஞர்காள்!! முழுமுதற் பொருளாம் முகுந்தனை முப்போதும் தொழும் பேரன்பர்காள்!!! இதுவரை உங்களில் எவரெவர் ஸ்ரீசௌரிப்பெருமாளை ஸேவித்து ஆனந்திக்கும் பாக்கியத்தை அடையவில்லையோ, அவரவர் இனியும் வீண்காலம் கடத்தாது, உடனே திருக்கண்ணபுரம் சென்று ஸ்ரீசௌரிராஜனை ஸேவித்து, அவனது திருவருளைப் பெற்று ஆனந்த மெய்தி இகபர சுகங்களைப் பெற்று இன்புற்று உய்வீர்களாக.

"இல்லை யல்லல் எனக்கேலினி யென்குறை?
அல்லி மாதர் அமரும் திருமார்பினன்
கல்லி லேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும் துயர்பாடு சாராவே."

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோஜ்ஞ: ப்ரவிஶ்ய மம வாங்மயம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

---

ஸ்ரீஅழகிய சிங்கர்.


ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், இரண்டு வருஷகாலமாக ஸ்ரீரங்கத்துக் கடுத்த திருப்பளாத்துறை என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்து, சற்றேறக்குறைய ஒரு மாஸம் முன்னதாக அவ்விடத்தினின்றும் புறப்பட்டு உத்தர தேச யாத்ரையாக எழுந்தருளி, மத்யே மார்க்கத்தில் அநேக திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சரண்யனை மங்களா சாஸநம் செய்துகொண்டு, சென்ற ஆனிமாஸம் 29உ புதன்கிழமை திநம் ஸ்ரீ மதுராந்தகத்துக்கு எழுந்தருளினுரென்று நாம் அறிகிறோம். இப்பொழுது நடைபெற வேண்டிய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவமும் அவ்விடத்திலேயே நடை பெற்றதாம். இன்னும் இரண்டு மாஸ காலத்துக்கு ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ மதுராந்தகத்திலேயே எழுந்தருளி யிருக்கவேண்டும். இந்தக் காலத்தில், அநேக சிஷ்யர்கள் அவ்விடத்தில் போய் இருந்துகொண்டு க்ரந்த காலக்ஷேபாதிகளைச் செய்யப்போகிறார்களென்றும் நாம் கேள்விப்படுகிறோம். இவையெல்லாம் நமக்கு மிக்க ஆநந்தத்தை ஜநிப்பிக்கின்றன. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஒரே இடத்தில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு இருந்துவிடாமல், தாபத்ரயாதிகளால் வருந்திக் கொண்டிருக்கும் தீநர்கள் எல்லாருக்கும் அவனுடைய ஸேவை கிடைக்கும்படிக்கும், ஆத்மோஜ்ஜீவநத்திற்கு உபாயமாகிற பஞ்ச ஸம்ஸ்கார மந்த்ரோபதேசாதிகள் எல்லாருக்கும் அதிக ச்ரமமின்றிக்கே லபிக்கும்படிக்கும், தேசாத் தேசம் ஸஞ்சரித்துக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளுகிறார் என்பது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு முகோல்லாஸகரமன்றோ? ஸ்ரீ ஸ்வாமி

யின் திருமேனி வார்த்தகத்தாலும் அசக்தியினாலும் அப்படிப்பட்ட ஸஞ்சாரத்திற்கு அதிமாத்ரம் அநர்ஹமாக இருக்கையிலும், அந்த அநர்ஹதையைச் சற்றேனும் கவனியாமல் இம்மாதிரி யாத்ரையில் ப்ரவ்ருத்திக்கிறார் என்பது அவருடைய தர்மநிஷ்டதையை நன்றாக விளக்குகின்றது. அப்படிப்பட்ட தர்மநிஷ்டர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய நியமநத்தை எல்லாருக்கும் த்ருப்திகரமாக நடப்பிக்கும்படி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்கவேணு மென்பது நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை. ஸ்ரீ சரண்யன் இச்சித்தால் எதுதான் துர்லபமாகும்?


* * * * * * * * *

யாஜுஷ உபாகர்மம்.

இவ்வர்ஷத்திய அத்யாயோபாகர்மத்தின் அநுஷ்டாநத்தைப் பற்றிப் பண்டிதர்களுக்குள் அபிப்ராய பேதம் ஏற்பட்டிருக்கின்றதென்று நாம் அறிகிறோம். சிலர் ஆடிமீ 28உ வெள்ளிக்கிழமை திநம் உபாகர்மத்தையும் மறுதிநம் காயத்ரீ ஜபத்தையும் அநுஷ்டிப்பதே சாஸ்த்ர ஸம்மதமாகுமென்றும், மற்றும் சிலர் 29உ சனிக்கிழமை திநமே இரண்டையும் அநுஷ்டிக்கவேண்டுமென்றும் அபிப்ராயப் படுகிறார்கள். இவ்விதம் பண்டிதர்கள் அபிப்ராயத்தில் பேதித்தால், சாஸ்த்ர விசாரத்தை நிஷ்கர்ஷிக்க அசக்தராக இருக்கும் நாம் செய்யவேண்டுவதென்ன? நமக்கு ப்ரியமாகவும் யுக்தமாகவும் தோன்றும் பக்ஷத்தை அநுஸரித்து நாம் நடப்பதே உசிதமாகுமென்று நமக்குத் தோன்றுகிறது. எந்தப் பக்ஷத்தை ஆச்ரயித்த போதிலும், மநோபாவத்தின் சுத்தியைப் பார்த்து ஸ்ரீ சரண்யன் நமது கர்மத்தைத் தனது ஆராதநமாகத் திருவுள்ளம் பற்றுவன் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், இது விஷயமாக நாம் நமது பண்டிதர்களுக்கு ஒரு விஜ்ஞாபநத்தைச் செய்துகொள்ளத் துணிவோம். அதாவது—இம்மாதிரியான தர்மாநுஷ்டாந விஷயங்களில், ப்ரமுகரான பண்டிதர்களுட் சிலராவது வர்ஷாரம்பத்தில் ஒன்று சேர்ந்து, அவைகளின் கால தேசம் முதலிய நிர்ணயங்களை ஒரு விதமாக நிஷ்கர்ஷித்து, அந்த நிஷ்கர்ஷத்தைப் பூர்வமாகவே எல்லாருக்கும் தெரியும்படி ப்ரசுரம் செய்தால், மிதஜ்ஞரான ஆஸ்திகர்களுக்கு அது பரமோபகாரமாக இருக்கும் என்பது தான். தீபிகையில் அம்மாதிரியான நிஷ்கர்ஷங்களை ப்ரசுரம் செய்ய நாம் எப்பொழுதும் ஸந்தோஷமுள்ளவர்களாகவே இருப்போம். அப்படி அநுஷ்டாந நிர்ணயத்தைச் செய்து மற்றவர்களுக்கு அதைத் தெரிவிக்க வேண்டியதும் வ்யபதிஷ்டர்களான பண்டிதர்களின் முக்யமான தர்மங்களுள் ஒன்றன்றோ?



ஸ்ரீ கோமளவல்லித்தாயார்.



ஸ்ரீ ஆராவமுதாழ்வான் (ஸ்ரீ சாரங்கபாணி.)

திருக்குடந்தை.